# விளம்பரம் ™
VLAMBARAM ™
416-282-8059 416-282-4978
சமூக முன்னேற்றப் பத்திரிகை மாதமிருமுறை இலவசம்



அமெரிக்க டொலருக்குப் போட்டி!!!
வாசியுங்கள்
உலகத் தமிழோசை
காலாண்டு சஞ்சிகை
தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



தி 12 JUNE 01, 2002 பாலம் 11


## கார் ஓடும் வீதியில் தேர் ஓடும்



## கனடா றிச்சமன்ஹில் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா


RE/MAX Above the Crowd!



வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Sales Rep.)
Office: 416.491.4002 Pager: 416.589.4270
இன்றைய சேவையே நாளைய வெற்றி!


## அருள் விருந்து

* அக்ஞானத்தில் இருப்பவர் உலகைப் பொல்லாதது என்கின்றனர். உலகம் முழுவதும் உனக்கு உகந்தது என்பதை அறிந்துகொள்.

* பதவியை நாடி அலைந்து திரியாதே. அமைதியுற்றிரு. உன்னை நாடிப் பதவி தானே வரும்.

* சிதறடைந்துபோன கடுகைச் சேகரிப்பது சுலபமானதன்று. சிதறடைந்து போன மனதும் அத்தகையது. உலக விஷயங்களில் சிதறடைந்து போக மனதை விடலாகாது.

- செ. சிவசுப்பிரமணியம்


Singapore Communication
Father's Day Madness
- Reliable & Friendly Service
- 50 mins day time Free
- Evenings & Weekend Free
- Every Day (12noon - 1p.m) Free
- Refer a friend & Receive a Free Gift
- Add.Day time min 0.30cts only
- Ask.$50/M - U/L Incoming call

Free Phone & $30.00 Plan*
• Call waiting, Conference Calling & Voice Mail Free
Pl.Call: Sathi /Ashma
Store: 416.740.5292 Cell: 416.717.6302
5010 Steeles Ave., W., Unit 17ABC - Kipling & Steeles





சிவாகம கிரியா பீடம்
(416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.
சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.





துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221





Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business

LIBERTY MUTUAL London Life
•416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD, TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059, FAX: (416) 282-4978 e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும்

104

விஜய குலத்துங்கம்



இந்த மாதம் 3ஆம், 4ஆம், 5ஆம் திகதிகளில் "Spider Man" என்ற திரைப படம் வெளிவிடப்பட்டு, அந்த வார இறுதி நாட்களில் 25 மில்லியன் அமெரிக்கர்கள் இந்த படத்தைப் பார்த்தார்கள். அந்தவார இறுதி நாட்களிலேயே மொத்தம் 115 மில்லியன் டொலர்களை வசூல் செய்து ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது. படம் தயாரிக்க ஏற்பட்ட மொத்தச் செலவு 120 மில்லயன் டொலர்கள் மட்டுமே. எனவே முதல் இரண்டு வாரத்தில் 120 மில்லியன் டொலர்கள் மட்டுமே. எனவே முதல் இரண்டு வாரத்தில் செலவழித்த பணத்தைப் போல இரு மடங்கு பணத்தைப் பெற்றுக் கொண்டது. இந்த Spiderman திரைப்படம் ஒரு சிலந்தி மனிதனைப் பற்றி யது. அதாவது சிலந்தியின் இயல்பு களையும், வல்லமையையும் கொண்ட ஒரு மனிதனைப் பற்றியது. ஆரம்பத்தில் காட்டூன் படங்களைக் கொண்ட கதைப் புத்தகமாகவும், பின்னர் கார்ட்டூன் தொலை க்காட்சிப் படமாகவும் வெளிவந்தது. இது மிக நீண்ட காலமாக தொடர்ந்து வெளி வருவதால் பல தரப்பட்ட மக்களிடையேயும் பிரபல்யமாக உள்ளது. இதன் முதலாவது திரைப்படம் 1989இல் வெளிவந்து மிக வெற்றியை ஈட்டியது.

இப்போது வெளிவந்துள்ள திரைப்படக் கதையின்படி ஒரு கல்லூரி மாணவன் ஒரு விஞ்ஞானப் பரிசோதனைக்காக பிறப்புரிமை அமைப்பு மாற்றப்பட்ட (Genetically Modi fied Spider) சிலந்திகளுடன் பரிசோதனை செய்யும் போது அதில் ஒரு சிலந்தி இம் மாணவனைக் கடித்து விடுகின்றது. இதன் ஆல் அந்த மாணவனுக்கு சிலந்திக்குரிய பல இயல்புகள் வந்துவிடுகின்றது. இவரின் காது, மூக்கு, வாய் ஒன்றும் தெரியாமல் உடல் முழுவதும் சிவப்பு, நீல நிறங்கள் சிலந்திவலை போன்ற கட்டம் போன்ற இறுக்கமான உடுப்பை அணிந்து இருப்பார். மெல்லிய உடல் கொண்டவராகவும், இறப் பர் போல் வளைந்து கொடுக்கக் கூடிய தாகவும் இருக்கும். கண் இருக்கும் இடத்தில் இரண்டு பெரிய நீள்வட்ட கண்ணாடி போன்ற கண்கள் உண்டு. இமை, கருவிழி போன்றவை இருக்க மாட்டாது. இந்த Spider Man அல்லது சிலந்தி மனிதன் அபார பலமும், அசா தாரண வல்லமை உடையவனாகவும் இருப்பான். எப்படி ஒரு சிலந்தி தனது சுரப்பு ஒன்றின் மூலம், சிலந்தி நூலை உரு வாக்கி, அதனால் சிலந்தி வலையை உருவாக்கியும், அதைப் பற்றி உயரமான இடங்களுக்கு பற்றி ஏறக் கூடியதாக இருக்கின்றதோ, அதைப் போல சிலந்தி-மனிதனும் கையினால் சுரப்பு ஒன்றைச் சுரந்து கயிறு போன்ற சிலந்தி நூலை உருவாக்கி, பல மாடி உயரக் கட்டி டங்களில் தாவி ஏறவும், சுவர்களில் பற்றி ஏறவும், கூரையில் தலை கீழாக ஊர் வதற்கும் வல்லமை உடையவர். இது பட த்தில் வரும் கதாபாத்திரம் செய்யும் வேலை. இப்போது நாம் ஒரு உண்மை யான சிந்தி பற்றிப் பார்ப்போம்.

சிலந்தியின் நூல் மிகவும் வலமை வாய்ந்தது. அதாவது சிலந்தி நூல் steel அல்லது மெல்லிரும்பை விட 5 மடங்கு வலிமையானது. அத்துடன் இறப்பர் போல இழுபடும் தன்மையுடையது. ஆனால் பஞ்சைவிட பாரம் குறைந்தது. சிலந்தி வலை இவ்வளவு பலமானதாக என நினைக்கக் கூடும். இதன் வலிமையினால் தான் சிலந்தி வலையில் விழும் எந்தப் பூச்சியும் தப்பிப் போகாமல் அகப்பட்டுக் கொள்ளும். நாம் சிலந்தி வலையை அகற்றும் போது, சிலந்தி வலை சுவரில் ஒட்டியிருக்கும் பகுதி விடுபடுகின்றதே தவிர, தனி நூல் ஒன்றை அறுப்பது என்பது கடினமான விடயம். இதன் வலிமையை ஒப்பீட்டு நோக்கில் பார்ப்போம் என்றால், ஒரு பென்சிலின் தடிப்பில் சிலந்தி நூலா லான ஒரு கயிறு ஒன்றின் மூலம் ஓடுகின்ற ஒரு Boeing 747, jumbo jet விமானத்தை இழுத்து நிறுத்தினாலும், இந்த நூல் அறுந்துபோக மாட்டாது.

இப்போது சிலந்திநூலை வேறு முறையில் அதிகளவில் தயாரிக்க விஞ்ஞானிகள் பல முயற்சிகளையும் எடுத்து வருகின்றார்கள். மொன்றியோவில் உள்ள Nexia Bio techniolo-gies என்ற நிறுவனம் இந்த சிலந்தி நூலைத் தயாரிக்கலாம் என அறிவித் துள்ளார்கள் இவர்கள் இந்த நூலிற்கு Biosteel என்று பெயரிட்டுள்ளார்கள். இதைத் தயாரிப்பதற்காக சிலந்தியிலுள்ள இந்த சிலந்தி நூலுக்குரிய gene அல்லது பரம்பரையலகை பிரித்தெடுத்து ஆட்டின் முட்டைக் கலத்தினுள் செலுத்தினார்கள். இப்படி உருவாக்கப்பட்ட ஆட்டின் பாலில் சிலந்தி நூலுக்கான புரதச்சங்கிலி உரு வாக்கப்பட்டு இருந்தது. எனவே ஆட்டின் பாலிலிருந்து இந்தப் புரதத்தை பிரித் தெடுத்து, அதிலிருந்து சிலந்தி நூலை தயாரிக்கக் கூடியதாக இருந்தது.

இவர்களை விட வேறு நிறுவனங்களும் இந்த சிலந்தி நூலை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. ஒரு நிறுவனம் சிலந்தியிலுள்ள இந்த நூலுக்கான gene ஐ பக்டீரியாக்களுக்குள் புகுத்தி, பின்னர் இந்த பக்டீரியாக்களை வளர்த்து பெருக்கி, அவற்றிலிருந்து இந்த சிலந்தி நூலுக்குரிய புரதத்தை பிரித்தெடுத்து நூலை உருவாக்கியுள்ளார்கள். இன்னுமொரு நிறுவனம் சோயா போன்ற தாவரங்களிலும் இந்த gene ஐப் புகுத்தி, பின்னர் சோயாத் தாவரம் இந்த நூலை உருவாக்குமாறு முயற்சி செய்கின்றார்கள்.

பெருமளவில் இந்த நூல் தயாரிக்கப்படும் போது இதற்கு பலவித உபயோகங்கள் இருக்குமென எதிர் பார்க்கப்படுகின்றன. இந்த நூல் தேயும் அளவும் மிகக் குறைவு என்பதால் உடுப்புகள், பாத அணிகள், உறுதியான கயிறு, வலை, சீட்பெல்ட், பரசூட்டுகள், துருப்பிடிக்காத காரின் பாகங்கள், உடலின் இரத்தக் குழாய்கள், நரம்புகள் ஆகியவற்றின் பிரதியீடுகள்



போன்றவற்றை உற்பத்தியாக்க இதன் தயாரிப்பாளர்கள் காத்திருக்கின்றார்கள். இந்த நூலின் முக்கிய உபயோகமாக குண்டு துளைக்காத மார்புக் கவசங்கள், உடுப்புகள், வாகனங்கள் ஆகியன இரு க்கும் குண்டு துளைக்காத மார்புக் கவசம் அல்லது bullet proof vest இப்போது KEVLAR என்னும் செயற்கை நூலினால் ஆக்கப்பட்டு வருகின்றது. ஆனால் சிலந்தி நூல் KEVlARஐ விட வலிமை வாய்ந்தது. எனவே இந்த சிலந்தி நூல் பொருட்கள் சந்தைக்கு வரும் நாள் வெகு தொலைவில்லை எனத் தெரிக்கின்றது. பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என விலங்குகள், மற்றும் பறவைகளில் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் விடயங்களுக்கு சிலந்தியும் ஒரு உதாரணம் ஆகின்றது. முன்னர் விடாமுயற்சிக்கு சிலந்தி உதாரணம் காட்டப்பட்டது. இப்போது அதன் வலிமை உணரப்படுகின்றது.

• • • • • •

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?
கவலையை விடுங்கள்
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

Vitaplex
சம்போ அன்ட் கன்டிஷனர்
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.






Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra
கிடைக்கும் இடங்கள்
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாகா, எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

J DAYCARE

* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்
1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00
தினசரி நடவடிக்கைகள்
* உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு வெளிப்புறச் சுற்றுலா
தொடர்புகளுக்கு:
Mrs.S.J. சௌந்தரநாயகம்
151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) 416-502-3033

* கற்காமல் இருப்பதை விடப் பிறக்காமலிருப்பதே நல்லது, ஏனெனில் அறியாமை தான் துர்பாக்கியத்தின் மூலவேர். - பிளேட்டோ

* தர்மம் என்பது கைகள் செய்வது மட்டுமல்ல அது இதயத்தின் அறம். - எடிசன்

ACTION HONDA
புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது

எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change
சிறந்த நேர்மையான சேவை
Best Service


Call me Now!! 416-704-1179
Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough


# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple





## விழாவில் உதிர்ந்தவை....

இலங்கையில் பல தமிழர்கள் பல பத்திரிகைகள் பவ வாசகர்கள் பல வர்த்தகர்கள் ஆனால் இலவசப் பத்திரிகைகள் இல்லை. ஆனால் கனடாவின், இலவசப் பத்திரிகை வெளியிடுகிறார்கள். உதயன் விழாவில் சிறப்புரை வழங்கிய வீ.கேசரி பிரதம ஆசிரியர் திரு. வி. தேவராஜ்.

நடிகன் என்பவன்.... மீன் போன்றவன். வீட்டில் தொட்டியில் மீனாக இருக்கும் வேளை அழகாகவும் சட்டியில் இருக்கும் வேளை ருசியாகவும் இருப்பதைப் போன்றவன்.

மேடையில் நடனத்தை வழங்கிய சென்னை திருமதி. சோபனாவின் மாணவிகள், ஒரே நேரத்தில் திறமையாக ஆடினார்கள். ஜேர்மனி வாணி நர்த்தனாலய மாணவர்கள் திறமையாக ஆடினார்கள். கனடிய நடன ஆசிரியர் வாசு சின்னராசாவின் சதங்கை நர்த்தனாலாய மாணவர்கள் அவர்களுக்கு சளைத் தவர்கள் இல்லை என்பதை நிருபித்து ஆடினர் என உதயன் விழாவில் கலந்து கொண்ட வினுச்சக்கரவர்த்தி குறிப்பிட்டு இருந்தார்.

மிசிசாக்காவில் நடைபெற்ற உதயன் 2002 விழாவின் போது தமிழக திரையுலகில் தனக்கொரு பாணியை அமைத்துக் கொண்ட நடிகர் வினுச்சக்கரவர்த்தி நடன, நாடகக், கலைஞர்களை.... விழாவில் பாராட்டிப் பேசினார்.

தொகுத்துத் தருபவர்
கலகலப்புதீசன்

***கண்டம் விட்டு கண்டம் தாண்டி கலைஞர்களை அழைப்பதும்.... பாராட்டுவதும் பெருமைதானே....***


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

# ரவி நடராஜா

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.



வீடு விற்க, வாங்க, மற்றும் குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குபடுத்திக் கொள்ள, இலவச ஆலோசனைகளிற்கும் ஆகக் கூடிய வீடுகளை விற்கும் Re/Max வீட்டுப் பிரதிநிதி "கேதா"வை நாடுங்கள்.



தொடர்புகளிற்கு: 416-677-4707
416-491-4002

24 hrs

# YARLCAN
# STEAM CLEANING

* CARPET CLEANING  * DUCT CLEANING

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709



## EDUCATION FUND SERICES Inc.

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!

சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044
Fax: 416-438-8532 Res: 905-472-1139
1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.

# உலக தமிழோசை

கடந்த சித்திரைப் புத்தாண்டில் வெளிவந்த உலக தமிழோசை காலாண்டு சஞ்சிகை உலகாளாவிய ரீதியில் தமிழர் வாழும் நாடுகளில் தமிழர் கைகளில் தவழ்வது பெருமைக்குரிய விடயம். அடுத்த சஞ்சிகைக்கான கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் போன்றவற்றை பலர் அனுப்பியுள்ளனர். நீங்களும் உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய தொலை நகல்: 416-282-4978
மின் அஞ்சல்: info@ulakathamiloszai.com

# கனடிய பாடசாலை - கல்வித்திட்டம்
# EDUCATIONAL INFORMATION



கடந்த மாதம், வைகாசி 2002 இல் கல்வித்திணைக்களத்தின் மீது நிதி நிலைமை குறித்து மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் பல்வேறு துறைகளிலும் நிதிநிலை குறைப்பு வீதங்கள் பல வருடங்களாக நடைபெற்று வந்த போதிலும், சில வருடங்களிற்கு முன்பு சுகாதாரத் திணைக்களத்தில் பெரும் நிதிக்குறைப்பு ஏற்பட்டு பொதுமக்களை அதிரவைத்த சம்பவத்திற்கு அடுத்ததாக இவ் வருடம் கல்வித திணைக்களத்தின் மீதும் நிதி நிலைக் குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்மா (சரவணபவ சர்மா)

மே 2002 இல் கிடைக்கப்பெற்ற இத்தகவல்களை இங்கே சுருக்கமாகக் கவனிப்போம்.

1. ஆசிரியர்களோ அல்லது பாடசாலை நிர்வாகத்தில் வேறு எவரோ பாடசாலைக்கு சமூக அளிக்காத பட்சத்தில் அவருக்கு பதிலாக வேறு ஒருவரை ஒழுங்கு செய்வற்கு எட்டு நாட்கள் வரை அவ்விடயம் பற்றி எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படப்போவதில்லை. (ex. Supply Teachers) முன்னர் அதேதினமே அவருக்கு பதிலாக வேறு ஒருவரை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

2. அதிகபட்சம் 16 குழந்தைகள் கொண்ட Junior Kindergarten வகுப்பிற்கும் 18 குழந்தைகள் கொண்ட Senior Kindergarten வகுப்பிற்குமான செல வினமானது தற்சமயம் 25.3 குழந்தைகள் கொண்ட இரு வகுப்புகளுக்கு மாற்றப்பட்டு ள்ளது. அதாவது 34 குழந்தைகளின் செலவுத் தொகை 50.6 மாணவர்களுக்கு மாற்றபட்டுள்ளது.

3. பிரதியீட்டு ஆசிரியர்களின் (supply teachers) எண்ணிக்கையில் குறைப்பு நிகழ்ந்துள்ளது. இதனால் வகுப்புக்களில் மாணவர்களது எண்ணிக்கை இரட்டிப் பாக்கப்படவுள்ளது.

4. (Educational Assistants) 50% வீதத்தால் குறைக்கப்படவுள்ளது. இதனால் Kindergarten வகுப்பறையில் 100% வீதம் உதவிகள் அற்றுப் போகவுள்ளது.

5. பாடசாலைகளின் இதரசெலவுகளுக்கான நிதியில் 10% குறைக்கப்படவுள்ளது.

6. கணினி (computer) நிதியில் 50% குறைக்கப படவுள்ளது.

7. இசைத் துறைப் பாடங்களில் பல உபகரணங்களில் குறைப்பும் இதனால் சில வாத்தியக் கருவிகளின் பாடங்கள் மூடப்படவுள்ளன.

8. மதிய வேளையில் வீடு செல்லாமல் பாடசாலையிலேயே நேரத்தை செலவிடும் மாணவர்களை பராமரித்து வந்த நிர்வாகத்தவர்களின் அனைத்து இடங்களும் நீக்கப் படவுள்ளது.

9. பாடசாலை ஆலோசனைக் குழுவானது (School community advisors) 22 இல் இருந்து 4 இடங்களாக குறைக்கப்படவுள்ளது.

10. எல்லாவிதமான வெளிப்புற பாடசாலை நிலையங்களும் (All outdoor education centres) குறைக்கப்படவுள்ளது. இனிமேல் ஆறாம் வகுப்பு மாணவர்களது மகிழ்ச்சியான 6 இரவுகள் கொண்ட "Kearney" பயணம் முற்றாகத் தவிர்க்கப்படவுள்ளது.

11. ஏறக்குறைய 107 உதவி அதிபர்களது இடங்கள் நீக்கப்படவுள்ளது. இதனால் மாணவர்களது பாதுகாப்புப் பலம் இழக்கப்படும்.

12. பாடசாலை நிர்வாகத்தில் ஏறக்குறைய 150 இடங்கள் குறைக்கப்படவுள்ளது. இவர்களே மாணவர்கள் பாடசாலைக்கு சமூகம் கொடுக்காத விடத்து பெற்றோர்களைத் தொடர்பு கொண்டு நிலைமையினை உறுதிப் படுத்துவதும், மாணவர்களது மற்றைய விடயங்களிலும் பாதுகாப்பானவர்களாக இருப்பவர்கள் ஆவார்.

13. கோடைகால வகுப்புகள் நீக்கம் செய்யப்படவுள்ளன. இனி வரும் காலங்களில் Gr.7, Gr.8 மாத்திரமே கோடைகால பாட-சாலைக்களுக்கு இடமளிக்கப்படும்.

14. கனடாவுக்கு புதிதாக குடிபெயரும் பெற்றோர், குழந்தைகளுக்கான மொழி பயிலும் "Link" போன்ற கல்வி முறைகள் மூடப் படவுள்ளன. (All parenting centers will be eliminated.) இந்நிலையே தமிழ் மொழி வகுப்புகளுக்கும் ஏற்படும்.

15. கட்டிடங்களின் அவசிய திருத்த வேலைகள் மாத்திரம் கவனத்தில் எடுக்கப்படும் மற்றைய வைகள் நீண்டகால அவகாசத்தின் பின்பே கவனிக்கப்படும்.

16. பிற்பகலில் தூய்மைப்படுத்தும் நிர்வாகம், தனியார் நிறுவனங்களுக்கு கை மாற்றப் படவுள்ளது. இதனால் பாடசாலை நேரம் தவிர்ந்த மாணவர்களது பிரத்தியேக பாடசலையின் உபயோகம் குறைக்கப் படவுள்ளது.

17. சாரசாரியாக 400 வகுப்பறைகள் மூடப்படவுள்ளன.

18. பத்து கனிஸ்ட்ட (Elementary) பாட-சாலைகளும், இரண்டு சிரேஸ்ட்ட (Secondary) பாடசாலைகளும் மூடப்பட வுள்ளன.

19. பாடசாலை மண்டபங்களின் பிற உபயோகங்களுக்கான கட்டண உயர்வும் வரையறுக்கப்பட்ட உபயோகங்களும் கவனத்தில் எடுக்கப்படவுள்ளன.

20. பெற்றோராயினும் பாடசாலை அலுவலகர்களாயினும் வாகனத்தரிப்பிற்கு பணம் செலுத்தவேண்டும். (No more free parking)

21. கோடைகால தேவைகருதி எல்லாப் பாட-சாலைகளும் மூடப்படவுள்ளன. இதனால் Junior Kindergarten மாணவர்களது மொழி வளர்ச்சி சம்பந்தமான வகுப்புகள் நிறுத்தப் படவுள்ளது.



மேலே கூறப்பட்ட இவ்விடயங்கள் சார்பாக இலக்கம் 135 Hupfield Trail, Scarborough இல் உள்ள MARY SHADD PUBLIC SCHOOL இற்கு சமூகமளித்து அதிபர் Ms. Mclanie Macleod (Principle) உம் உதவி அதிபர் Ms. Sandra Keith (Vice - Principle) ஆகியோரை சந்தித்து அவர்களது கருத்துக்களையும் செவி மடுத்தேன். "மிகவும் வேதனைப்படக் கூடிய விடயங்கள்" என்று எடுத்த எடுப்பிலேயே குறிப்பிட்ட அதிபர் இவ்விடயம் சார்பாக இப் பத்திரிகை எடுத்துக் கொண்ட சேவைக்கு நன்றி தெரிவித்தோடு சில தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். மிக ஆவலாக பதிலளித்த Ms. Melanie Macleaod, மாணவர் களது மதியவேளையின் போது கடமையாற்றும் ஊழியர்களது நிறுத்தம் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தும் என்றும், இதனால் வீடு செல்லாமல் பாடசாலையிலே உணவு நேரத்தைச் செலவிடும் மாணவர்கள் இனிமேல் வீடுகளுக்கே செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றும் தெரிவித்தார். இதனால் இத்தகைய மாணவர்களுக்கு பெற்றோர் வேறு சில ஏற்பாடுகள் செய்ய வேண்டி ஏற்படும் என்றும், தற்சமயம் 100 இக்கும் மேற்பட்ட மாணவர்கள் இப் பாடசாலையில் உணவு நேரத்தை பாடசாலையிலே களிக்கின்றனர் என்பதனையும் கோடைகால வகுப்புகள் மூடப்படுவதையும் வேதனையோடு சுட்டிக் காட்டினார்.



இவ்விடயம் சார்பாக June 19ஆம் திகதி எடுக்கப்படவுள்ள வாக்கெடுப்பு நிகழ்வுக்கு முன்னதாக பெற்றோருக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள் என்று கேட்டபோது, "முடிந்த அளவு கல்வித்திணைக்களத்திற்கு பெற்றோர் தங்களது கடிதங்களை அனுப்புவதும், தொலைநகல் (fax) செய்வதும் பெரிதும் இதனை தடுக்க உதவும்" என்று பதிலளித்ததுடன் பெற்றோர் அனுப்ப வேண்டிய மாதிரிக் கடிதத்தையும் பிரசுரிக்கும் படி கேட்டுக் கொண்டார்.

phone 416.325.1941 fax: 416.325.7578

இதைவிட "பெற்றோர்களது கையெழுத்துக்கள் நிரம்பிய கடிதங்கள் கூட பாடசாலைகளில் சமர்பிக்கலாம் என்றும் இதனை எவராவது ஒருவர் பொறுப்பேற்று நடத்துவது தங்களுக்கு பெரிதும் துணைபுரியும்" என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் பெற்றோர் பிள்ளைகளின் நலனையும் அவர்களது எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு செயல்ப்படும்படி கேட்டுக்கொண்டார்.

இவ்விடயம் சா்ர்பாக உரிய திணைக்களங்களுக்கு பெற்றோர் June 19ஆம் திகதிக்கு முன்பாக தமது கருத்துக்களைத் தெரியப்படத்துவது மிகவும் அவசியம்.

---

Toronto District School Board

**Help Save School Programs and Services**

Budget 2002-2003

Dear Premier Eves and Minister Witmer:

I am very concerned about the drastic impact of funding cuts to the Toronto school system.

The current provincial funding formula does not meet the real needs of students in the Toronto District School Board. If your government does not make substantial changes to the funding formula, my school will lose programs and services and my child's education will suffer.

I strongly urge you to:

- immediately review the funding formula
- maintain current funding levels (2001 / 2002) until the review is completed; and,
- put our children first by providing the level of funding that our children need and deserve.

Name (please print) ____________ Signature ____________

Address / School ____________

Please return this card to the Trustees Office, 155 College St. Toronto M5T 1P6, so that it can be forwarded to the Premier and the Minister of Education.

---


**Computer Training Center** — **NEA-TEC Solution Provider**

To Register: Call (416) 438-6614 or visit www.nea-tec.com

| Programming | |
|---|---|
| C Programming | $175 |
| Advanced C Programming | $200 |
| C++ Programming | $175 |
| C++ for C Programmers | $175 |
| Introduction to Java | $200 |
| Advanced Java | $225 |
| Java Web Application | $250 |
| C++ for Java Programmers | $200 |
| Web Design (HTML/Animation) | $150 |
| Web Design && Architecture | $200 |
| Intro to Visual Basic 6.0 | $150 |
| Advanced Visual Basic 6.0 | $200 |
| Flash 5.0 | $125 |
| Internet && World Wide Web | $249 |

| Application Software | |
|---|---|
| Introduction to Computers | $125 |
| Senior Starters | $100 |
| Kids Computer Courses | $ 75 |
| Key Boarding/Data Entry | $100 |
| Microsoft Office 97/2000 | $325 |
| • Word 97/2000 | $120 |
| • Excel 97/2000 | $120 |
| • P/ Point 97/2000 | $120 |
| • Access 97/2000 | $120 |
| Microsoft Word Macros | $130 |
| Microsoft Excel Macros | $130 |
| Crystal Report | $125 |
| AccPac Windows v4.2 | $475 |
| • Account Payable | $175 |
| • Account Receivable | $175 |
| • General Ledger | $175 |

| High School/College/University Students Package | |
|---|---|
| Introduction to C Programming | $150 |
| Introduction to C++ Programming | $150 |
| Introduction to Java Programming | $175 |
| Pascal Programming | $100 |
| Web Design I (with HTML) | $ 75 |
| Web Design II (With Front page) | $ 75 |
| Web Design III (With Animation) | $150 |
| Flash 5.0 | $ 75 |

| Unix/Linux Courses | |
|---|---|
| Introduction to Unix | $ 90 |
| Shell Scripting | $19 |
| Unix System Admin | $199 |

| Computer Hardware Courses | | |
|---|---|---|
| A+ Certification | Core | $199 |
| | Windows | $199 |
| PC Assembling / Trouble Shooting | | $199 |

Message
- Convenient time
- Create job opportunities
- Hands on Training
- Qualified Instructors
- Small class size (3 to 8 )
- Fast Internet Access

1027 Markham Road, Scarborough (Markham && Brimorton)
E-Mail: info@nea-tec.com Or visit www.nea-tec.com

# விண்வெளி

43

கனி



## அந்நியர்கள் - Aliens

Ufoக்களில் விபத்துகள் கூட ஏற்பட்டுள்ளன. அ[illegible]ன் சிதறல்கள் கூடப் பூமியில் உ[illegible]வர்களிடம் உள்ளன எனச் சிலர் கூறுகின்றார்கள். ஏலியன்கள் என்று ஒன்றுமே இல்லை. Ufoகள் எல்லாம் வெறும் மனப்பிரமை என்பவர்கள் இவர்கள் கூறும் விடயங்களை மறுத்தாலும், இவை கூடக் கொஞ்சம் கரிசனையில் எடுக்கப்பட வேண்டியதாக உள்ளது.

**இன்றைய நாட்களில் அமெரிக்காவே வானியல் துறையில் முன்னணியில் உள்ளது. பல வகையான விண் கலங்களை எல்லாம் விண் வெளிக்கு காலத்திற்குக் காலம் செலுத்தி விண்வெளியைத் துருவித் துருவி ஆய்வு செய்கிறது.**

ஆர்ஜன்ரீனாவில் உள்ள சில வைரச் சுரங்கங்களை அடுத்துள்ள பகுதிகளில் சில சுரங்கத் தொழிலாளர்களிடம் வித்தி யாசமான உலோகத்துண்டுகள் அகப்பட்டன. அவற்றின் பளபளப்பிலும் மினுமினுப்பிலும் கவரப்பட்ட அத்[illegible]ழிலாளர்கள் அத் துண்டுகளைத் தம்[illegible]ன் வைத்துக் கொண்டனர். ஒரு சிலர் இத்துண்டுகளை பகுப்பாய்வு செய்பவர்களிடம் கொடுக்க, அதனைப் பகுப்பாய்வு செய்தவர்கள் அத்தகைய உலோகத் துண்டுகள் பூமியின் எப்பகுதியிலும் இல்லை. அத்துடன் அவை மிக நுட்பமாகச் செப்பனிடப்பட்டுள்ளன எனவும் கூறினார்கள். இவ்வாசகங்களினால் கவரப்பட்ட சிலர் இத்துண்டுகள் ஒருவேளை விபத்துக்குள்ளான Ufoகளின் சிதறல்களாக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்கள். ஒரு சிலர் இத்தகைய வித்தியாசமான துண்டுகளைத் தேடி எடுத்துச் சேகரிக்கவும் செய்கிறார்கள்.

இதே போலவே ரஷ்யாவின் வைரச் சுரங்கங்களை அடுத்த பகுதிகளிலும் பல வெவ்வேறு வடிவ பளபளப்பான அந் நியமான உலோத்துண்டுகள் கண்டு எடுக்கப்பட்டன. சிறியதும் பெரியதுமான பல துண்டுகள் தொடர்ச்சியாகக் கண் டெடுக்கப்பட்டு அரசாங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன. அவற்றைப் பகுப் பாய்வுக்குட்படுத்திய அதிகாரிகள் இவை எமது பூமிக்கு அந்நியமான உலோகத் துண்டுகள் என முதலில் கூறினார்கள். அத்துடன் சுமாராக 30 ஆயிரம், 20 ஆயிரம் வருடங்கள் பழமை வாய்தவை என்றும் கணித்துக் கூறினார்கள். சரி, இவ்வளவு தொகையில் எவ்விதம் இவ்விடத்திற்கு இவ் உலோகங்கள் வந்திருக்கலாம் என்று வினவிய பொழுது ஒருவேளை அப் பகுதியில் வாழ்ந்த அல்லது இருந்த பழைய நாகரிகம் ஒன்றின் விடுபாடுகள் ஆக இருக்கலாம் என மிகச் சாதாரண மாகக் கூறி அவ்விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். அத்துடன் அந்த வித்தியாசமான எல்லாத்துண்டுகளையும் எடுத்துச் சென்றதுடன் ஒருவரிடமும் அந்த பளபளப்பான உலோகத்துண்டுகள் இல்லை என்பதையும் உறுதி செய்து கொண் டார்கள். இச்செயற்பாடு சிலரைச் சிந்திக்கச் தூண்டியது. இவ்விவகாரத்தில் அசி ரத்தையாக இருப்பது போல் பாசாங்கு காட்டிய அதிகாரிகள் ஏன் அவ்வளவு அக்கறையாக அந்த உலோகத் துண்டுகளை ஒன்றும் கூட விடாது அகற்றினார்கள்? பழைய நாகரிகம் ஒன்று பாவித்த உலோகமாக அவ் உலோகத்துண்டுகள் இருப்பின் அந்த நாகரிக இன மக்களைப் பற்றிய எந்தவொரு தகவல்களும் வாய்மொழி வழியாகவேணும் அப்பகுதியில் ஏன் இல்லாமல்போனது? எல்லாவற்றிக்கும் மேலாக 30 ஆயிரம் வருடங்களின் முன்னர் அதிஉயர் நாகரிக இனம் ஒன்று அப்பகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்று மிகச் சாதாரணமாக கூறிய அதிகாரிகள் ஏன் அது பற்றி அவ்விடத்தில் தொடர்ந்தும் ஆய்வுகள் செய்யவில்லை? சரி 30 ஆயிரம் வருடங்களின் முன்னர் அப்பகுதியில் மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்றால், நாம் அறியவே மனித இனத்தின் காலம் 10 ஆயிரம் வருடங்களுக்கு முன்னதாக எதுவுமே இல்லையே? இது போன்ற பல கேள்விகள் பலரது மனதைத் துளைக்க ஏலியன்கள், ufoகள் பற்றி ஆய்வு செய்பவர்களே என்றால் அவ்வுலோகங்கள் எல்லாம் இரண்டு அல்லது மூன்று ufo களின் விபத்தின் போதான அவர்களது விண்கலங்களின் சிதறல்கள் ஆகத்தான் இருக்க வேண்டும் என ஊகிக்கின்றார்கள். இது போல் உலகின் பல பகுதிகளிலும் இது போன்ற ufo விண் கலங்களின் சிதறல்கள் இருக்கலாம் என அவர்கள் கூறுகின்றார்கள்.

இன்றைய நாட்களில் அமெரிக்காவே வானியல் துறையில் முன்னணியில் உள்ளது. பல வகையான விண்கலங்களை - எல்லாம் விண்வெளிக்கு காலத்திற்குக் காலம் செலுத்தி விண்வெளியைத் துருவித் துருவி ஆய்வு செய்கிறது. ஆரம்ப நாட்களில் படுதோல்வியில் முடிந்த அமெரிக்கர்களது முயற்சிகள் எல்லாம் இன்று எப்படி வெற்றியளிக்கத் தொடங்கி யது என்ற கேள்வி சிலரிடம் எழுந்தது. இதற்குக் கூட ஏலியன்கள் தான் காரணம் எனச் சிலர் கூறுகின்றார்கள். ஏலியன்கள் இடம் இருந்து பெற்றுக் கொண்ட அல்லது கடன்வாங்கிய உயர் தொழல்நுட்பத்தன் உதவியுடனேயே இது சாத்தியமானது, சாத்தியமாகிறது எனச் சில ஏலியன் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். அது எப்படி? மறு முறை பார்ப்போம்.




Kiruba Kirushan

*Service with a broad smile*

## EASY HOME BUY

வீடு வாங்கவோ, விற்கவோ சுலபமான முறையில் Mortgage வசதிகள், செய்து தரப்படும். மேலும் எல்லாவிதமான காப்புறுதி வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சிறிய தொகையுடன் நீங்களும் ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர் ஆக அழையுங்கள்.

Thinking of buying a home or selling your home and all kinds of insurance!

வீடு வாடகைக்கு விட விரும்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

With a small down payment, you could own your dream home.

For all your housing needs call:

Tel: 416-414-5562


விடுகதை

* உப்பை விழுங்கியவன் உறங்காமல் ஓடித்திரிகிறான் அவன் யார்? கடல்அலை
* சங்கீதமும் பாடுவான் சலவைக்கும் உதவுவான் அவன் யார்? கழுதை
* உடைத்துப் பார்த்தேன் ஒளியுடன் வெளிவந்தான் அவன் யார்? முத்துச்சிப்பி-முத்து


## NTE AUTO INC.

New Trade Engineering



ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

Also Air Condition Service & Repair



என். ரி. இ. ஓட்டோ இங்க்

CONTACT: SIVABALAN - (416) 750-1573

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCAR.



## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்

- நிரந்தர வதிவிட உரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு பாதிக்கப்படும்

• CRIMINAL

• DOG BITES

• SLIP & FALL

• ACCIDENT INJURIES

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா? முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

S.K.THEESAN

எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன்

416-490-9199

உ

சுவாமியே சரணம் ஐயப்பா







அருள்மிகு

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough. ON. M1V 5B8, CANADA. TEL: 416-321-6104 FAX: 416-321-7558
web: www.ayyappan.com

## வட அமெரிக்காவில் முதல் முதலில்

# 1008 சங்குஸ்தாபன விஞ்ஞாபனம்

## 7-06-2002 வெள்ளிக்கிழமை

பேரன்பு கொண்ட ஐயப்பன் மெய்யடியார்களே!

நிகழும் சித்திரபானு வருடம் உத்தராயண காலம் வைகாசி மாதம் 25ம் நாள் (07-06-2002) வெள்ளிக்கிழமை அச்சவினி நட்சத்திமும் அபரபட்ஷ துவாதசித் திதியும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 7:00 மணிக்கு வரும் சுபவேளையில் ஸ்ரீ ஐயப்ப பெருமானுக்கு புதிதாக அமைய இருக்கும் ஆலயத்துக்கான நிரந்தர கட்டிடத்துக்குரிய ஆரம்ப நிகழ்ச்சியாக 1008 சங்குஸ்தாபனம் நடைபெறும். அதற்கான கிரியைகள் 01-06-2002 சனிக்கிழமை காலை 9:00 மணிக்கு விக்னேஸ்வர பூசையுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10-06-2002 திங்கட்கிழமை நடைபெறும் வைரவர் மடையுடன் பூர்த்தியாகும்.

மானிடப்பிறவியில் கிடைத்தற்கரிய பேறாகிய சங்குஸ்தாபன பெருவிழாவில் அடியார்கள் அனைவரும் வருகைதந்து தினமும் நடைபெறும் கிரியைகளிலும் 07-06-2002 வெள்ளி முதல் 09-06-2002 ஞாயிறுவரை அடியார்களின் கரங்களினால் ஐயப்பனின் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கும் சங்குஸ்தாபன நிகழ்வுகளிலும் பங்கு கொண்டு ஐயப்பனின் திருவருள் பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்போடு வேண்டிக் கொள்ளுகின்றோம்

## சங்குஸ்தாபன விஞ்ஞாபன நிகழ்ச்சி நிரல்

| காலை | மாலை |
|---|---|
| **1-06-2002 சனிக்கிழமை காலை 9:00 மணி**<br>அனுக்ஜை, விக்னேஸ்வரபூசை, தனபூசை, கணபதிஹோமம், ஷோடசகணபதி பூசை, லட்ச அர்ச்சனை ஆரம்பம் | **1-06-2002 சனிக்கிழமை மாலை 6:00 மணி**<br>ஏகதசருத்ர பூசை |
| **2-06-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி**<br>துர்க்காஹோமம் லட்ச அர்ச்சனை | **2-06-2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி**<br>மஹாலட்சுமிஹோமம் |
| **3-06-2002 திங்கட்கிழமை காலை 9:00 மணி**<br>லட்ச அர்ச்சனை | **3-06-2002 திங்கட்கிழமை மாலை 6:00 மணி**<br>நவக்கிரகஹோமம் |
| **4-06-2002 செவ்வாய்க்கிழமை காலை 10:00 மணி**<br>விசேட பூசை, லட்ச அர்ச்சனை | **4-06-2002 செவ்வாய்கிழமை மாலை 6:00 மணி**<br>ஸ்கந்தஹோமம் |
| **5-06-2002 புதன்கிழமை காலை 10:00 மணி**<br>சாந்திஹோமம், திசாஹோமம், மூர்த்தி ஹோமம், லட்ச அர்ச்சனை | **5-06-2002 புதன்கிழமை மாலை 6:00 மணி**<br>வாஸ்துசாந்தி |
| **6-06-2002 வியாழக்கிழமை**<br>காலை 5:13 முதல் 7:01க்குள் மிதுன லக்கினத்தில் சங்குஸ்தாபனத்திற்கு பதவிநயாச பூசைகள், நவரத்தினப்பேழை ஸ்தாபனம் தொடர்ந்து கோவிலைச் சுற்றி திக்பாலபூசைகள், லட்ச அர்ச்சனை | **6-06-2002 வியாழக்கிழமை மாலை 6:00 மணி**<br>சண்டிஹோமம் ஆரம்பம், முதலாம் காலப்பூசை |
| **7-06-2002 வெள்ளிக்கிழமை காலை 7:00 மணி**<br>சண்டிஹோமம், இரண்டாம் காலப்பூசை, சுவாஸிநி பூசை, கன்யா பூசை, வடுக பூசை, வசோத்தார ஹோமம், மஹாபூர்ணாகுதி, அம்பாளுக்கு அபிசேகம் பூசை, அடியார்கள் சங்குஸ்தாபனம் செய்தல் | **7-06-2002 வெள்ளிக்கிழமை மாலை 6:00 மணி**<br>தீபலட்சுமி பூசை |
| **8-06-2002 சனிக்கிழமை காலை 8:00 மணி**<br>லட்ச அர்ச்சனை, அடியார்கள் சங்குஸ்தாபனம் செய்தல் | **8-06-2002 சனிக்கிழமை மாலை 5:00 மணி**<br>ஸ்ரீ ஐயப்பனுக்கு 108 கலச பூசைகள் ஆரம்பம், சாஸ்தாஹோமம் |
| **9-06-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணி**<br>108 கலச பூசைகள் இரண்டாம் காலம்<br>லட்ச அர்ச்சனை, தொடர்ந்து ஹோமம், மஹாபூர்ணாகுதி, அபிசேகம், விசேட பூசை, அடியார்களின் கரங்களினால் சங்கு ஸ்தாபனம் செய்தல், அன்னதானம் | **9-06-2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணி**<br>விசேட பூசை<br>ஸ்ரீ ஐயப்பன் திருவீதி உலா |

**10-06-2002 திங்கட்கிழமை வைரவர் மடை**

**மாலைக் கலை நிகழ்ச்சிகள் மாலை 6:30 மணி தொடக்கம் 9:30 மணிவரை நடைபெறும். 2-06-2002 ஞாயிற்றுக்கிழமையும், 4-06-2002 செவ்வாய்க்கிழமையும் வில்லிசைத் திலகம், வில்லிசைச் சக்கரவர்த்தி திரு. நா. கணபதிப்பிள்ளை (சின்னமணி) அவர்களின் வில்லசை நிகழ்ச்சி நடைபெறும்**

இறை சேவையிலுள்ள
அறங்காவலர் சபையினர்

# அன்புத் தமிழ்



## அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்

வி[illegible]மித்திரன், இராமன், இலக்குபவன் [illegible]ம் சனகன் கேள்வியைக் காணச் சென்றார்கள். மிதிலை நகரினுள் அரண்மனை வீதியாற் செல்கையில் கன்னி மாடத்தில் நின்ற சீதையின் அழகு இராமன் கண்களைக் கவர்கின்றது.

சீதையின் அழகை விவரிக்க இயலாது. பொன்னின் சோதி போன்ற அவளது அழகுக்கு பெண்களுக்கு இலட்சுமியைத்தானே எல்லோரும் ஒப்பிடுவர்? இலட்சுமியான சீதைக்கு வேறு ஓர் ஒப்பு எங்கே உண்டு? மதியைப் போன்ற முகம் என்றோ மதிமுகம் என்றோதான் அழகான பெண்களின் முகத்தை வர்ணிப்பது வழக்கம். அப்படியும் சீதையின் முகத்தை ஒப்பிடவோ உருவகஞ் செய்யவோ இயலாது, காரணம் அவளது பகல்போன்ற முகத்தில் இருந்துதான் சந்திரனே ஒளிபெறுகின்றது.

அந்த ஒப்பற்ற அழகைக் கண்டு களிக்கும் அனுபவம் செஞ்சொல் கவி ஒன்றைப் படித்து இன்புறும் அனுபவத்துக்கு நிகரானது. தேவர் அளிக்கும் அமுதை உண்டு பெறும் ஆனந்த வாழ்வுக்குச் சரியானது.

சீதையின் பேரழகுக் காட்சியின் கரை காணாத இத்தகைய இணையற்ற அழகு இராமனைக் கவராமல் இருக்க முடியுமா? அண்ணல் நோக்கினான் அவளும் நோக்கினாள்.



எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுளி
கண்ணொடு கண் இணை கவ்விஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.
(மிதி. காட்சி படலம்)

நோக்குதல் என்னும் சொல்லைக் கவனித்தல் வேண்டும். பார்த்தல் என்று நாம் அதற்குப் பொருள் கொண்டாலும் இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. பார்த்தலில் பெரிதும் கண்களே உள்ளன. நோக்குதலில் உள்ளமும் கலந்திருக்கின்றது. நோக்குதல் இலக்கியங்களில் ஒரு காதற் சொல்லாகவே பயின்று வருகின்றது. காதல் உணர்வு ஒன்றிடப் பார்த்தல் நோக்குதல் ஆகும்.

அண்ணலும் நோக்க அவளும் நோக்கிய அக்கணமே காதல் பிறந்து விட்டது. பாசத்தால் பிணித்து ஒருவர் உள்ளத்தை மற்றவர் உள்ளம் ஈர்த்தது. "வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்" என்பர் கம்பர். அதாவது, சீதையின் இதயம் இராமனிடமும் இராமனின் இதயம் சீதையிடமும் புகுந்து விட்டன. இதயங்கள் மட்டுமா இடம் மாறின? "ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்" என்று கம்பர் இருவரது காதலை மேலும் உயர்த்துகின்றார்.

பொதுவாக காதல் மலரத் தொடங்கும் ஆரம்ப கட்டங்களில் காதலன் நோக்கும் பொழுது காதலி எதிர் நோக்குச் செய்வதில்லை. காதலிக்குரிய இந்த நாணத்தை வள்ளுவர் இப்படிச் சொல்கிறார்.

யான்நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும். (110:04)

சீதையிடம் இந்த நாணத்தைக் காணமுடியவில்லை. இராமனின் அழகு அவளின் நாணத்தை விழுங்கி விட்டிருத்தல் வேண்டும். மேலும் அவன் நடந்து கொண்டிருக்கிறான்.

**இமையாத கண்களை உடையவர் தேவர். அவளது தெய்வீக அழகைப் பார்ப்பவர் தேவர்கள் ஆவாரோ?**

இன்னும் சில விநாடிகளில் அவன் அப்பால் மறைந்து சென்றுவிடப் போகின்றான். இந்நிலையில் வள்ளுவர் காட்டும் காதலிபோல் சீதையால் நடந்து கொள்ளமுடியவில்லை. ஒரே பார்வையில் அவன் உள்ளத்தை கவர்ந்து விட்டான். உள்ளம் இருந்தால் தானே நாணம்? அவனது தோற்றத்தில் தன்னை மறந்து "ஓவியப் பாவை" போன்று நிற்பவளிடம் நாணத்தை எப்படி எதிர்பார்ப்பது? இதனினும் மேலான ஒரு விளக்கத்தைக் கம்பர் தருகின்றார். பெண்களுக்கு நாணம் இயல்பானது. முன்பின் தெரியாத ஆடவனைக் காண்கையில் அது முன்னுக்கு நிற்கும். தெரிந்த ஆடவன் எனின் அது பின்னுக்குப் போகும். அவ்வளவே சீதையிடம் நாணம் நிறையவே இருக்கின்றது. எனின், மிகவும் பழக்கமான இராமனைக் கண்டதும் நாணம் பின் சென்று விட்டது. என்ன, இராமன் பழக்கமானவனா?

கருங் கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?
(மிதி.காட்சிப் படலம்)

இராமர் திருமால் அவதாரம். சீதை திருமாலின் சக்தி இலட்சுமி. ஆக, இராமர் சீதை சந்திப்பு திருமால் இலட்சுமி சந்திப்பு. சீதை இராமருக்கு மிகவும் பழக்கமானவள். திருப்பாற் கடலில் அன்று பிரிந்தவர்கள் மிதிலையில் இன்று சந்திக்கிறார்கள். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? உண்மைக் காதல் முன்வினைப் பயன் என்பதையும் இதனால் நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது

உமையாள் அழகை ஒக்கும் மங்கையர் "இமையா நாட்டம் பெற்றிலம்" என்கிறார். அதாவது, அவளது அழகு தங்கள் கண்களை இமையாக் கண்கள் ஆக்கி விட்டதாம். அவளது தெய்வீக அழகைப் பார்ப்பவர் தேவர்கள் ஆவாரோ? சரி, அந்தர வானத்துத் தேவர்கள் எல்லோரும் என்ன சொல்கிறார்கள்? "இரு கண்ணால் அமையாது" என்கிறார்கள். சீதையின் அழகைக் கண்டுகளிக்க இரண்டு கண்கள் போதாவென அங்கலாய்க்கிறார்கள்.

**[illegible]விஞர். வி. கந்தவனம்**


அவளது அழகுக்கு அணிகலன் வேண்டியது இல்லை. ஆனாலும் அரசகுமாரி அவற்றை அணியாமல் இருக்க முடியுமா என்ன? அவள் அணிந்திருக்கும் அளவில்லாத அழகு மிகுந்த ஆபரணங்கள் அவளை அழகுபடுத்தவில்லை. மாறாக, அவளது மேனியிலே இருப்பதால் ஆபரணங்கள் அழகு பெற்றன என்கிறார் கம்பர்.

இழைகளும் குழைகளும் இன்ன முன்னமே
மழைபொரு கண் இணை மடந்தை மாரொடும்
பழகிய எனினும் இப் பாவை தோன்றலால்
அழகு எனும் அவையும் ஓர் அழகு பெற்றதே!
(மிதிலைக் காட்சிப் படலம்)


## CONCORD AUTO GLASS

PROFESSIONAL GLASS INSTALATION

GLASS REPLACEMENT STARING FROM $99
For All Domestic & Foreign Cars, Trucks & Heavy Equipment




Life Time Workmanship Warranty

* Stone Chip, Repair
* We Specialise In Door Glass, Back, Windshield & Power Door Problems

Call us First

**416 858-1910**

## யோகா சோதிடம்



* கிரகப் பொருத்தம் பார்த்தல்
* சுபமுகூர்த்தம் கணித்தல்
* சாதகக் குறிப்புக் கணித்தல்
* பலன் பார்த்தல்

**416-299-8361**

14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 131

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | |
| 3 | 4 | ■ | | ■ | ■ | | 5 |
| | ■ | | | | 6 | ■ | |
| | ■ | ■ | | ■ | | | 7 |
| 8 | | | | | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | | ■ | | | 9 |
| | ■ | | ■ | 10 | ■ | ■ | |
| 11 | | 12 | | | | ■ | |

**இடமிருந்து - வலம்**

1.அரவக் கொடியோன்
3.தங்கு
5.இருள் (வல - இட)
6.ஒரு சுற்று (வல - இட)
7.சூரியன் (வல - இட)
8.இலங்கையில் சீமெந்து தொழிற்சாலை உள்ள இடம்.
9.பரீட்சை (வல - இட)
11.எக்காலமும்

**மேலிருந்து - கீழ்**

1.அறுசுவையில் ஒன்று
2.தொடர் வண்டி ஓட இது தேவை
4.எண்ணெய் விளக்கு எரிய உதவுவது (கீழ் - மேல்)
6.சூட்டினால் பொரியச் செய்
9.தானியம் ஒன்று
10. உடலில் உள்ள மச்சம்
11.உரம் (கீழ் - மேல்)
12. அறிவொளி கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பு | ல் | லா | ங் | கு | ழ | ல் | ■ |
| ள | ■ | ■ | ■ | க | ■ | ■ | ■ |
| கா | ண் | டீ | ப | ன் | ■ | ண் | பூ |
| ங் | ■ | ■ | ■ | ■ | ப | ■ | ந் |
| கி | ழி | ■ | ம் | ர | தி | த் | தோ |
| த | ■ | ■ | ம | தி | ல் | ■ | ட் |
| ம் | ■ | தீ | ரு | ■ | ■ | ■ | ட |
| ■ | ச | ல | த | ர | ங் | க | ம் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JUNE 25, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**130இல் வெற்றி பெற்றோர்**
1) Mrs. B. M. Rita, Toronto, Ont.
2) L. Thavaluxmy, Donmils Ont.


* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**

## தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459

253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai

# உலககிண்ணம் - 2002 உதைபந்தாட்டம்



உலக உதைபந்தாட்ட இரசிகர்கள் அனைவரும் நான்கு வருடங்களாக தவம் கிடந்து காத்திருந்த உலக கிண்ணம் ஆரம்பமாகிவிட்டது. ஒரு மாதம் தொடர்ந்து நடைபெற இருக்கும் 777 ஆட்டங்களை, கடந்த நான்கு வருடமும் விளையாடி 2452 goal கள் போடப்பட்டு இப்போது 32 நாடுகள் இறுதி நிலைக்கு வந்துள்ளன. முக்கியமாக இம்முறை ஆர்ஜன்ரீனா, பிரான்ஸ், இத்தாலி, பிரேசில், ஜேர்மனி, போர்த்துக்கல் பலம் பொருந்திய நிலையில் உள்ளன. ஆனால் ஆட்டங்கள் நடப்பதோ ஆசியா கண்டத்தில். யார் வெற்றி பெறுவார்கள் என்று கணிப்பது மிகக் கடினமான விடயம். ஆனாலும் ஆர் ஜென்ரீனாவும் பிரான்சும் முன்ணியில் நிற்கின்றன. ஆனால் நிச்சயமாக ஆர் ஜென்ரீனாவும் பிரான்சும்

எஸ். கணேஷ்

இறுதிப் போட்டியில் சந்திக்க முடியாது. ஏனெனில் அட்டவணையை கூர்ந்து நோக்கினால் இப்போது பலம் பொருந்திய இந்த இரண்டு நாடுகளும் கால் இறுதி அல்லது அரை இறுதியில் சந்திக்க இருப்பதைக் காண லாம். எது எப்படியாயினும் இத்தாலியும் , ஜேர்மனியும் கடைசிவரை போராடியே தீருவார்கள். மூன்று முறை உலகக் கிண்ணத்தை சுவீகரித்த ஜேர்மனியும், இத்தாலியும் இம் முறையும் விட மாட்டார்கள் என்பது உண்மை. அதே நேரத்தில் பலம் பொருந்திய, நான்கு தடவை உலக கிண்ணத்தை வெற்றிக் கொண்ட ஒரே ஒரு நாடான பிரேசில் உட்பூசல்களால் அல்லல் படுகின்றது. பலம் பொருந்திய பிரான்ஸ் அணி கடந்த உலககிண்ணத்தை (1998) வென்றதுடன் மட்டும் நின்றுவிடாமல் (2000) ஆண்டு ஐரோப்பிய கிண்ணத்தையும் பெற்றது யாவரும் அறிந்ததே. பலம் பொருந்திய இவ் அணிகளா அல்லது புதிதாக இதுவரை உலக கிண்ணத்தை வெல்லாத அணிகளா 22 கரட் பெறுமதியுள்ள தங்ககோப்பையை வெல்லப் போகின் றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**முதலாம் பரிசு**
*singapore Communcation*
**இரண்டாம்பரிசு**
*Scarborough Rangers*
**மூன்றாம் பரிசு**
*Scarborough Rangers*
**நான்காம்பரிசு**
*Scarborough Rangers*

REQUIRED:


Select the top two teams, in order of finish, for each of the eighgroups.
Map your selections to the second round matches and select winners.
Continue until you have selected the World Cup champions.
Predict the TOTAL goals scored by the champions throughout the tournament (for tie breaker purposes).


POINTS:

1 point for each correct group pick (maximum 16 points)
2 points for each correct second round pick (maximum 16 points)
3 points for each correct quarterfinal pick (maximum 12 points)
4 points for each correct semifinal pick (maximum 8 points)
5 points for each correct semifinal pick (maximum 5 points)
6 points for each correct semifinal pick (maximum 6 points)

TIES:

The tie-breakers are as follows:
1) person closest to total goals scored by World Champions
2) most correct picks regardless of point value (32 picks)








<u>*4 அடிப்படைப் புள்ளி விதிகள்:*</u>

* 1 புள்ளி - முதல் சுற்றில் சரியாக தெரிவு செய்யப்படும் 2 நாடுகள் / Group (16 நாடுகள்) - (16 புள்ளிகள்)
* 2 புள்ளிகள் - இரண்டாவது சுற்றில் தெரிவு செய்யப்படும் 8 நாடுகள் (16 புள்ளிகள்)
* 3 புள்ளிகள் - கால் இறுதியாட்டத்தில் (Quarter Finals) வெற்றிபெறும் 4 நாடுகள் (12 புள்ளிகள்)
* 4 புள்ளிகள் அரைஇறுதியாட்டத்தில் (Semi Final) வெற்றிபெறும் 2 நாடுகள் (8 புள்ளிகள்)
* 5 புள்ளிகள் - மூன்றாவது இடத்திற்குப் போட்டி போட்டு வெற்றி பெறும் 1 நாடு (5 புள்ளிகள்)
* 6 புள்ளிகள் - சரியாக தெரிவு செய்யப்படும் World Champion - 1 நாடு (6 புள்ளிகள்

<u>*5. சமம் (TIES):*</u>

* சரி சமமாகப் புள்ளி பெறுபவர்களில் World Champion இன் மொத்த கோல்களில் இருந்து கணிக்கப்படும்.
* அதிலும் சரி சமமாக இருந்தால் (Most Correct Picks) REGARDLESS OF POINT VALUE (32 Picks) இதில் இருந்து தெரிவு செய்யப்படும்.

6. இந்தப் போட்டிகளில் ஏதாவது கேள்விகள் இருந்தால் தயவு செய்து என்னுடன் தொடர்பு கொள்ளவும் எஸ். கணேஷ் 416-566-1575
7. எட்டு Group இல் இருந்தும் இரண்டு நாடுகளின் படி 16 நாடுகள் தெரிவு செய்யப்படும். ஆனால் சரியாக தெரிவு செய்யப்படும் Winners, Runners மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.
8. அட்டவணைப் பகுதியை மட்டும் வெட்டியெடுத்து விளம்பரம் தொலைநகலுக்கு அனுப்பவும். Fax: 416-282-4978









## 2002 WORLD CUP SOCCER POOOL

| GROUP A | GROUP B | GROUP C | GROUP D |
|---|---|---|---|
| France | Spain | Brazil | South Korea |
| Senegal | Slovenia | Turkey | Poland |
| Uruguay | Paraguay | China | United States |
| Denmark | South Africa | Costa Rica | Portugal |

| GROUP E | GROUP F | GROUP G | GROUP H |
|---|---|---|---|
| Germany | Argentina | Italy | Japan |
| Saudi Arabia | Nigeria | Ecuador | Belgium |
| Ireland | England | Croatia | Russia |
| Cameroon | Sweden | Mexico | Tunisia |

<u>போட்டிவிதிகள்:</u>

1. "விளம்பரம்" பத்திரிகை வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் இலவசமாகக் கலந்து கொள்ளலாம்.
2. "விளம்பரம்" பத்திரிகை வெளியீட்டாளர்கள் (நிர்வாகிகள்) எவரும் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியாது.
3. 8 Groups இல் A1 - winners, A2 - Runners, 8 Group இலும் 2 நாடுகளை நீங்கள் தெரிவு செய்யலாம். தொடர்ந்து World Champions வரை நாடுகளை நீங்கள் தெரிவு செய்யலாம். மொத்தப் புள்ளிகளை இருவர் சமனாக தெரிவு செய்தால் கோல் (goal) அடிப்படையில் வெற்றி வழங்கப்படும். அதாவது நீங்கள் World Champion ஆக தெரிவு செய்யும் நாடு மொத்தமாக சகல ஆட்டங்களையும் சேர்த்து எத்தனை கோல்களை அடிக்கும் என்பதை நீங்கள் குறிப்பிட வேண்டும்.

YOUR NAME: ______________ E-MAIL: ______________

PHONE: ______________

INTERNAL USE ONLY RECEIVED:
ENTERED:

| GROUP WINNERS | ROUND OF 16 | QUARTER FINALS | SEMI FINALS | THIRD PLACE |
|---|---|---|---|---|
| A1 / A2 | 1 E1 vs B2 | 9 W2 vs W6 | 13 W10 vs W11 | 15 L13 vs L14 |
| B1 / B2 | 2 A1 vs F2 | 10 W1 vs W5 | 14 W9 vs W12 | FINAL |
| C1 / C2 | 3 F1 vs A2 | 11 W4 vs W8 | | 16 W13 vs W14 |
| D1 / D2 | 4 B1 vs E2 | 12 W3 vs W7 | | |
| E1 / E2 | 5 G1 vs D2 | | | |
| F1 / F2 | 6 C1 vs H2 | | | |
| G1 / G2 | 7 H1 vs C2 | | | |
| H1 / H2 | 8 D1 vs G2 | | | |

TOTAL GOALS SCORED BY CHAMPS: ______________



# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**



## ...ர் உணவின் பயணம் - 1

ஆரோக்கியமான உடலைப் பெற மனிதன் அன்றாட உணவில் அவசியமானவற்றை மட்டும் உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். ஆனால் இன்று ருசிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வேளை தவறி அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு உடலைப் பேணும் முறைபற்றி தவறான கருத்துடன் உடலைப் பருக்க வைத்து நோயை வரவளைத்துப் பலரும் வாழ்ந்து கொண்டிருப்பதை காண முடிகிறது.

உதட்டிலிருந்து குதம் வரை உணவின் பயணத் தூரம் சுமார் 26 அடி 65 சென்ரி மீற்றர் ஒவ்வொரு வகை உணவும் அதனதன் தன்மையைப் பொறுத்து 4 மணி முதல் 7 மணி வரை பயண நேரத்தை எடுத்துக் கொள்கிறது. எனினும் தனிப்பட்ட முறையில் ஒவ்வொருவருடைய ஜீரண தன்மையைப் பொறுத்து மாறுபடலாம்.

கடினத் தன்மையுள்ள உணவுகளை முதலிலும், மிருதுவானவற்றை இரண்டாவதாகவும், முடிவில் திரவப் பொருட்களையும் சாப்பிட்டால் உடல் நலமும் வலிமையும் உண்டாகும். அடுத்ததாக முதலில் இனிப்புப் பொருட்களையும் நடுவில் புளிப்புப் பொருட்களையும் உப்புச் சுவை உள்ளவைகளையும், இறுதியில் உவர்ப்பும் கசப்பும் கொண்டவைகளையும் உண்ணுதல் நன்மை தரும்.

உண்ணும் வேளையில் கோபப்படாமலும் பிறருடன் சண்டை பிடிக்காமலும், மனதுக்குத் துன்பமான நிகழ்ச்சிகளை நினையாமலும் உட்கொள்ள வேண்டும். ரம்மியமான சூழ்நிலையிலும் மெல்லிய இசையைக் கேட்டுக் கொண்டும் உணவு அருந்துவது நல்லதாகும்.

உணவு இரண்டு பங்கும் நீர் ஒரு பங்கும் சாப்பிட்டு மூச்சை இயல்பாக சென்றுவர வயிற்றில் கால் பகுதியை வெற்றிடமாக வைத்திருக்க வேண்டும். முதிர்ந்த பழுத்த பழங்களை ஒரு வேளை உணவுடன் சேர்த்து உண்ணுவது உயர்ந்த முறையாகும். அடுத்த பச்சைக் காய் கறிகளை நீராவியில் வேகவைத்து சாப்பி டுதல் அடுத்து முளைகட்டிய தானிய வகைகளை உண்பதும் சிறந்த முறையாகும். இவற்றைக் கடைப்பிடிக்க முடியாது போனால் முறைப்படி சமைத்த உணவும் நன்மை தரும். குளிர்ந்து காய்ந்து போன பண்டங்கள் எளிதில் ஜீரணமாகாது. அது போல் அதிக சூடான உணவுகள் உடல் வலிமையைக் குறைக்கும். சமைத்த பின் வெகுநேரம் கழித்து உண்பதால் வயிற்று வலியும் வாயுத் தொல்லையையும் மலச்சிக்கலையும் ஏற்படுத்தும்.

வேகமாகச் சாப்பிடக் கூடாது, சுவைத்து மெதுவாக உண்பவர்களுக்கு நோய் அதிகம் வராது. ஜீரணத்தன்மை குறைவாக உள்ளவர்கள் கடினத் தன்மையுள்ள உணவுப் பொருட்களை உண்ணலாகாது.

சோற்றை கறிகளுடன் கலந்து நன்கு பிசைந்து உண்ணும் போது அது எளிதில் சமிபாடடையும். உடல் உழைப்பின் திறனுக்கு மீறி அதிகம் உண்பதால் சோர்வும் உடல் பருமனும் வயிற்றுக் கோளாறும் உண்டாகும். எந்த உணவாக இருந்தாலும் காலாகாலத்தில் சாப்பிட வேண்டும். காலம் தவறி உண்பதால் நோய்தான் மிஞ்சும். சாப்பிடும் போது நீர் அருந்தினால் எளிதில் ஜீரணமாகாது. சாப்பிட்ட பின் அதிக நீர் குடித்தால் வயிற்றுப் பருமல் அதிகரிக்கும்.

உணவானது சரியான நேரத்தில் மலமாகி வெளியேறுவதுடன் சத்தானது 21ஆம் நாளில் திரவமாக இரத்தமாக எலும்பாக மாறுவதுடன் சிறு பகுதி ஆன்மாவுடனும் சேர்வதாக உடலியல் வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆனால் தவறான உணவு வகைகளால் மலச்சிக்கல் ஏற்படும் போது உணவிலுள்ள சத்துகள் உடலில் சேர்வதில் பல பிரச்சனைகள் தோன்றுகிறன. எனவே ஒவ்வொருவரும் அவரவர் உடலின் தன்ஜமயை கண்டறிந்து அதற்குப் பொருத்தமான உணவு வகைகளைத்



தேர்ந்தெடுத்து உண்பதால் முழுமையான ஆரோக்கியத்துடன் வாழமுடியும்.

உடலின் தன்மை என்னும் போது மனிதர்கள் நான்கு வேறுபட்ட உடல்மைப்பைக் கொண்டிருக்கின்றனர்.


1. பித்த உடம்பு
2. கபால உடம்பு
3. வாத உடம்பு
4. வாயு உடம்பு

ஒவ்வொரு வரும் தாம் எந்த உடம்பு வகையைச் சார்ந்தவர்கள் என்று அறிந்து கொள்ளும் முறையினையும் அதற்கேற்ற உணவு முறைகளையும் அடுத்த 'விளம்பரம்' இதழில் தருகின்றேன்.



# SISTER FATIMA

Spiritual Psychic Advisor
Palm Card, Crystal Ball, Psychicreadings, Also Holistic Healer And Adcisor
God gifted healer with the power strength, and knowledge to help you overcome all your problems such as:
* Love * Health * Marriage / Divorce * Separation
* Bad Luck, Evill influence *Infertility * Lucky day & Numbers
* House Blessings * Removing Black Magic

**SATISFACTION GUARANTEED**
**416-264-5836 (Eglintion & Markham Area, Scar.)**




# NEW Technology
Security and Sound Inc.




- BODY KIT
- CUSTOM INTERIOR
- PERFORMANCE PARTS
- COIL OVER SPRING KITS
- CAR ALARM AND REMOTE STARTER
- INSTALLATIONS
- CAR AUDIO




RIMS AND TIRE

*MOBIL VIDEO DVD MUCH MORE....*






MUFFLERS AND TIPS

Shanger Tel - 416-335-4070
cell - 416-451-4517
Fax - 416-335-936
www.newtechno.net

*We also do any electrical work.*

**3501 Mcnicoll Ave., Unit 9, Scarborough, Ont., M1V 2N3**

# வெளிவந்து விட்டது




**உலகத் தமிழோசை கிடைக்கும் இடங்கள்**

**ரொறன்ரோ பெருப்பாகம்**

| | |
|---|---|
| • Yarlnagar Traders | 416-285-0587 |
| • Samy & Sons | 416-298-1598 |
| • Best Way | 416-444-8202 |
| • Thuvarakas | 416-757-1095 |
| • Royal Grocery | 416-693-8078 |
| • AVM Varities Stores | 416-285-3347 |
| • ARK Market | 416-421-3429 |
| • Siva Brothers | 416-532-1107 |
| • Ak International | |
| • Kalaimahal Book Deopt | 416-921-5018 |
| • Uthayas SuperMarket | 416-740-7971 |
| • Thomas | |
| • Aruna Market | |
| • Rajee | 416-240-0039 |
| • Shangar International | 416-759-5100 |
| • Serendip | 416-261-2230 |
| • Kumaran Video | 416-264-4254 |
| • Ganesha Spicey Mart | 416-289-2292 |
| • Saravanas Market | 416-439-5727 |
| • Colombo food | |
| • New Spiceland | 416-292-9769 |
| • Greenlands | 416-609-3333 |
| • Daily Needs | 416-490-7703 |
| • Poompugar | 416-499-8386 |
| • SP Importers | 416-261-4737 |
| • Priyas | 905-944-1292 |
| • Yogas | 416-267-0408 |
| • Embassy | 416-332-8451 |
| • Gnanams | 416-750-8118 |
| • Bread Master Bakery | 416-299-5083 |
| • Vallin Super Market | 416-724-5453 |
| • Lourdes | 416-264-1546 |

Montreal
Lingam 1 -514-345-8445

Ottawa
Nanthan 1 614 -823-6667

Vancouver
•Kumar • Thukkas • Kesavan

USA - Newyork - • Subas

உலகத் தமிழோசை சஞ்சிகையை
விற்பனை
செய்ய விரும்புபவர்கள்
முருகன் புத்தகசாலை (416) 285-9118
விளம்பரம் (416) 282-8059
ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளவும்

# முதலீடு - ஓர் அறிமுகம்

(Investments an Introduction)-விக்னேஷ்

ஒரு நிறுவனத்தின் பங்குகளை (shares) வாங்கும் போது நீங்கள் அந்த நிறுவனத்தின் சொந்தக்காரர் ஆகிறீர்கள். உங்களைப் போல ஆயிரக் கணக்கானோர் அதன் சொந்தக் காரர்களாக இருகக் கூடும். ஆனால் தனிநபர் நிறுவனம் போன்று சொந்தக்காரருக்கு இங்கு நிர்வாகத்தில் நேரடிப் பங்கு கிடையாது. தனிநபர் நிர்வாகத்தில் அவர் வேண்டியவரை வேலைக்குச் சேர்க்கவோ, விலக்கவோ முடியும். ஆனால் பொதுமக்களிடம் பங்கு பெறும் நிறுவனங்களின் நிர்வாகம், சட்ட திட்டங்களுக்குட்பட்டு, தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு பொதுவாக நிர்வகிக்கப்படுகின்றது.

பெரிய அளவில் தொழில் தொடங்கும் போதும், பெ[illegible] திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் [illegible] அளவில் நிதி தேவைப்படுகின்றது. இதை ஒரு தனிநபரோ, சில நபர்களோ போடுதல் என்பது இயலாத காரியம். அத்தகைய சூழ்நிலையில் பெரும்பாலும் மக்களிடமிருந்து பங்குகள் பெறப்படுகின்றன. நேரடியாக நிறுவனங்களிலிருந்து வாங்கிய பங்குகளை பங்குச் சந்தையில் விற்கவும் முடியும். அதேபோல பங்குச் சந்தையிலிருந்தும் (stock markey) பங்குகளை விலைக்குப் பெறமுடியும். இவற்றைப் பற்றி பின்னர் பார்ப்போம். தொழிலைத் தொடங்கவும், நிர்வகிக்கவும் பொதுவாக இரு வகையில் நிதி திரட்டப் படுகின்றது.

1. தனிநபர்கள் 2. நிறுவனங்கள்

நீங்கள் வங்கியில் உள்ள பணத்தைப் போடும் போது, அந்தப் பணத்தை வங்கி மற்றவர்களுக்குக் கடன் கொடுக்க உபயோகிக் கின்றது. இவ்வாறு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட சேமிப்புகளைக் கொண்டே வங்கிகள் கடன் வழங்குகின்றன. இத்தகைய வங்கி உதவிகளை நிறுவனங்களின் மூலம் பெறப்படும் நிதி உதவியாகக் கூறலாம்.

உங்கள் பென்சன் தொகை, இன்ஸ்சூரன் போன்றவையும் நிறுவனங்களின் மூலமாக பங்குச் சந்தையைச் சென்றடைகின்றது.

ப[illegible] சந்தையின் ஆரோக்கியமும், பொருளா தாரத்தின் ஆரோக்கியமும் பிரிக்க முடியாதவை. பொருளாதாரம் நன்றாயிருக்கும் போது பங்குச் சந்தையில் விலைகள் பொதுவாக ஏறுமுகமாக இருக்கும், பங்குச் சந்தையில் விலைகள் சரியும் போது பொருளாதாரமும் வீழ்ச்சியடைகின்றது. இதில் மகிழ்ச்சி தரும் விஷயம் என்ன வென்றால் ஏற்றம், இறக்கம் - இரண்டுமே நிரந்தரமல்ல. நிறுவனங்கள் மட்டுமன்றி அரசாங்கங்களும் கூட மற்றொரு முறையிலும் தேவையான நிதியை மக்களிடமிருந்து திரட்டுகின்றன. அதுதான் "கடன்வாங்குதல்".

பழைய காலத்தில் கடன்வாங்கியவர்கள் மனம் கலங்குவார்கள். இந்தக் காலத்தல் கடன் கொடுத்தவர்கள்தான், பணம் திரும்ப வர வேண்டுமே என்று பதைக்கும் சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

எப்படியோ, நிறுவனங்கள் கடன்வாங்கும் போது கடன் பத்திரங்களைத் தருகிறார்கள். இப் பத்திரங்களைப் பெற்றோர், பங்குதாரர்களைப் போல, நிறுவன உரிமையாளர்கள் அல்ல. ஆனால் நிறுவனங்களுக்குக் கடன் கொடுத் தவர்கள் ஆவர். இவ்விரு சாருக்கும் உள்ள வேறுபாடுகளையும், அவற்றால் விளையும் நன்மை தீமைகளையும் பின்னர் பார்ப்போம்.

பெ[illegible]ாக கடன்பத்திரங்களை வாங்கும்போது குறிப்பிட்ட அளவு வட்டிவீதம் வழங்கப் படுகின்றது. முன்னர் குறிப்பிட்டதைப் போன்று அரசாங்கங்களும் கடன் பத்திரங்களைக் கொடுத்து மக்களிடமிருந்து கடன்பெறுகின்றன. உதாரணமாக, நீங்கள் கனடா சேமிப்புப் பத்திரங்களை வாங்குகிறீர்கள் என்று கொள்வோம்; அப்படியானால் நீங்கள் கனடிய அரசுக்கு நிதி கொடுத்தவர்கள் ஆகிறீர்கள். அரசாங்கங்கள் பொதுவாக இவ்வாறு கடனாகப் பெறப்படும் நிதியை வளர்ச்சித் திட்டங்களிலேயே பயன்படுத்துகின்றன.

பொதுவாக கடன்பத்திரங்களைவிட பங்குகள் ஆபத்து நிறைந்தவையாகக் கருதப்படுகின்றன. கடன்பத்திரங்களைப் பெறும்போது நாளைக்குப் பெறப்படும் வருமானம் ஊகிக்கக் கூடியாதாக உள்ளது. ஆனால் பங்குகளைப் பொறுத்த மட்டில் அவ்வாறு சொல்ல முடியாது. பங்குச் சந்தையில்(stock market) பொருளை இழந்தோர் நிறைய உள்ளனர். அதே சமயத்தில் பயன் அடைந்தோரும் நிறைய உள்ளனர். பேராசை தலைப்படும் போதும், போதிய தகவல் இன்றி செயல்படும் போதும் பெரும் இழப்பு நேருகின்றது.

முதன்முறையாக ஒரு நிறுவனம் பங்குகளை வெளியிடும் போது, மக்கள் அந் நிறுவனத் திடமிருந்து நேரடியாகப் பங்குகளைப் பெறு கிறார்கள். பிறகு அவ்வப்போது தேவைக்கேற்ப, இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்து நிறு வனங்கள், பங்குகளை வெளியிடலாம். இவை பெரும்பாலும் ஆரம்பத்தில் வெளியிட்டதைவிட குறைவாகவே எண்ணிக்கையில் இருக்கும். இவை முதல்தர சந்தை (primary market) என்பது சொல்லப்படும்.

இவ்வாறு ஏற்கனவே மக்கள் வசம் உள்ள பங்குகளையும், கடன்பத்திரங்களையும் தேவை என்றால் விற்கவும் முடியும். இவ்வாறு விற்பதை இரண்டாவது சந்தை (secondary market) என்று சொல்கிறார்கள். யாருக்கு விற்கிறோம்/ நன்கு கவனிக்க வேண்டும். நாம் இப்போது விற்கப் போவது தேவைப்படும் இன்னொரு தனி நபருக்கு. நமக்கு விற்ற நிறுவனம் அதைத் திருப்ப இரண்டாவது சந்தையில் வாங்குவ தில்லை.

நல்ல நிறுவனங்களின் பங்குகளிலோ, கடன்பத்திரங்களிலோ முதலீடு செய்யும் போது இரண்டாவது சந்தை அங்கு உள்ளது. அதாவது பங்குகளையும், பத்திரங்களையும் என்றைக்கு வேண்டுமானாலும் விற்கலாம், வாங்கலாம். நமக்கு பணம் தேவை என்றால் பங்கை இரண்டாவது சந்தையில் விற்றுப் பண மாக்கலாம். அத்தகைய விற்பனையில் இலாபத்தையும் தரலாம்; நட்டத்தையும் தரலாம். அது எவ்வாறு என்பதை பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

விற்பது என்றால் என்ன செய்யவேண்டும்?
அதற்குத் தரகர்களிடம் செல்ல வேண்டும். அவர்களைத் தரகர் (broker) எனலாம். இன்றைக்கு இன்டர்நெட் மூலமும் விற்க வசதி உள்ளது. தரகு நிறுவனத்தின் மூலம் விற்பதற்கும், இன்டர்நெட் மூலம் விற்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எது யாருக்கு ஏற்றது என்பதைப் பிறகு பார்ப்போம். அனுபவம் இல்லாத ஒருவர், தரகர் மூலம் விற்பதே சிறந்தது. தரகர் உங்களின் பிரதி நிதியாகச் செயல்படுகின்றார். உங்களுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் நல்ல தரகர் வழங்குவார்.

முதலீடு அறிமுகம் தொடரும்.... அதுவரை....

### ஊடகவியலாளர் கவனத்திற்கு,

உலகத் தமிழர் இயக்க சமூக நூலகத்தின் அறிவித்தலும் அன்பான வேண்டுகோளும்
எமது நூலக சேவை சிறப்புற நடைபெறுவதைக் கேள்வியுற்ற நலன் விரும்பிகள் பலர் பல நூல்களை அன்பளிப்புச் செய்து வருகின்றனர். அந்த வகையில் கடந்த 18-05-2001 அன்று பிரபல சோதிடர் கந்தையா வரதலிங்கம் அவர்கள் 236 சோதிட நூல்களையும் 111 ஏனைய நூல்களையும் எமது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். அன்னாரின் சிறந்த கைங்கரியத்துக்கு நன்றி தெரிவிப்பதுடன் ஏனையோரும் இவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தம்மிடம் இருக்கும் நூல்களை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.


அத்துடன் கனடாவில் நூல் வெளியீடு செய்தவர்களும் இனிமேல் நூல்களை வெளியீடு செய்ய இருப்பவர்களும் எமது நூலகத்திற்கும் தங்கள் நூல்களை அன்பளிப்புச் செய்து நூலக வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர்.தமிழீழ மற்றும் இலங்கை எழுத்தாளர்களின் நூல்கள் பற்றாக்குறையாக இருப்பதனால் கனடாவில் வசிப்பவர்கள் யாராவது தம்வசம் வைத்திருக்கும் மேற்படி நூல்களை நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்வீர்களாயின் நன்றியுடையவர்களாவோம் . தொடர்புகட்கு- தொலைபேசி இல. (416) 335-0622
உலகத்தமிழர் இயக்க சமூக நூலகம்


## Cell Phone Specialist

YOUR CONNECTION

1733 Eglinton Avenue E.
Uint 5 Toronto, Ont.
M4A 1J8

## FIDO PLANS



* NO CONTRACT * NO ACTIVATION FEES

| Per Month | $30.00 | $45.00 | $45.00 |
|---|---|---|---|
| Day Time | 150 | 300 | 200 |
| Evenings & Weekends | 1000 | 1000 | Unlimited |
| Call Forward | Yes | Yes | Yes |
| Call Waiting | Yes | Yes | Yes |
| Conference Call | Yes | Yes | Yes |
| Voice Mail | Yes | Yes | No |
| Minute Tracker | Yes | Yes | No |
| Call Display | No | No | No |

Call: Selvi or Naresh
தமிழில் தொடர்புகளுக்கு அழையுங்கள்: செல்வி
416-285-8800 OR
1-866-309-1010

## FREE PAGING





CityGear Go. Be
Alpha Numeric Multi Lined
Display Window Pagers

* NO AIRTIME CHARGES FOR LIFE*
* FREE VOICE MAIL FOR 1 YEAR

## ROGERS AT & T WIRELESS

Nokia 3360



$50* on 2 year contract

$35 PLAN
175 minutes daytime / mth
Unlimited evening / Weekends
Free Call Display Free Voice Mail
Free Call Forwarding
* After mail in Rebate

Ericsson T18



$25* on 2 year Contract

## BELL MOBILITY

NO CREDIT CHECK
SOLO MONTHLY 2MTHS FREE ($35 PLAN)
NO CONTRACT

100 DAYTIME MINUTES PER MONTH & UNLIMTED EVENINGS AND WEEKENDS

$169* Audiovox 9100
$40 Mail in Rebate



$199* Mot 120c$
$50 Mail in Rebate



199* Nok 6185
$70 Mail in Rebate



மொன்றியலில் இருந்து அழைத்துப் பதிவு செய்பவர்களுக்கு தொலைபேசி அனுப்பி வைக்கப்படும். எங்களிடம் தொலைபேசிக்குத் தேவையான எல்லா விதமான துணைப் பொருட்களையும் பெற்றுக்கெள்ள முடியும்.
தொலைநகல் இலக்கம்:416-285-6841

நகைச்சுவைத் தொடர்.... -66

# "ராசம்மாவின் ராஜ்யம்"

-கலகலப்பு தீசன்



1974ஆம் ஆண்டு 4வது அனைத்துலக தமிழராச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இறுதி நாள் நிகழ்ச்சியில், கலவரம் 10 தமிழர்கள் பலி
இது எமக்கு பெரிய இழப்பு .... நாளடைவில் 1977 யூலை, 1983 யூலை
குண்டுவீச்சு, இந்திய இராணுவம் அது....இது....
உயிர்பலி.... மொத்தம் பல்லாயிரம்.



எதுவும் பழக்கபட்டு விட்டால் பயம், கிட்டவும் நிற்காது கடந்த செப்ரெம்பர் 11இல் அமெரிக்க உலக சந்தை கட்டடம் மீது விமானம் மோதிய பின் விமான நிலையம் போகவும் பயம்
தலைக்கு மேலால்.... விமானம் பறக்கப் பயம்....
விமானத்தின் பிரயாணிகளை ஏற்றத் தொடங்கிவிட்டனர், பிறிம்பிலி மீனாக்கா எல்ஸ்மெயர் இளையதம்பியை விடுகிற பாடில்லை....



தனது.... பழைய காதலியின் கதையை மீனாக்கா.... குடையப் போகிறாவோ.... எண்ட பயம் இளையதம்பிக்கு.... முகம் இருண்டு போயிருந்தது....

என்னடா.... பயப்படுகிறாய்.... போலிருக்கிறது
உந்த பொம்பருக்கும், ஹெலிக்கும் தப்பி, பங்கருக்கையும், பத்தையளுக்குள்ளையும் இருந்து விஷமியளிட்டையும் விஷப்பாம்புகளிட்டையும் தப்பிவிட்டமாம்....

**ஆறிலையும் சாவுதான் நூறிலையும் சாவுதான்** பயப்படாதையடா....என்றவாறு பிளேனுக்குள் நுளைந்தா.... மீனாக்கா, கடன்காரனுக்கு டிமிக்கி கொடுத்து ரெலிபோன் லைன் கட்பண்ணி.... விலாசமே....இல்லாமல் இருந்த இளையதம்பிக்கு 500இக்கு மேற்பட்ட சீற் உள்ள பிளேனில் மீனாக்காவின் கண்ணில் மண் தூவி... விட்டு.... வேறு சீற்றில் இருப்பது... பெரிய வேலையில்லை...



மீனாக்கா.... ஒருவாறு.... தனது.... சீற் இலக்கம் தேடி.....
இருந்துவிட்டா.... இளையதம்பி.....தொடர்ந்து நடக்க
ஹலோ.... சேர்.... ஹியர் இஸ் யுவர் சீற்....
ஓ...தாங்.... யூ... என்றபடி இளையதம்பி.... மீனாக்காவுக்கு
அடுத்த....சீற்றில் இருந்து.... உடனேயே தனது இரத்தக் கொதிப்பு....
குளிசைகள் இரண்டை.... தண்ணியில்லாமலே வாயில் போட்டுக் கொண்டார்.

பின்லாடனும் ஜோர்ச்புஷ்ம் அதிஸ்டவசமாக சந்தித்தால்.... எப்படியிருக்கும் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ? இறைவனிடம் ஏதோவெல்லாம்.... கேட்கவேண்டும் என கோயிலுக்குப் போய் கண்மூடி நின்று **சிவாயநம.... சிவாயநம**.... என ஐந்தெழுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்துவிட்டு வருகிறோம்.

**"சிவாயநம என்று சிந்தித்திருப் போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை..."**
காதலியைக் கண்டதும்.... பல விடயம் கதைக்க வேண்டுமென்று.... செல்பவன் காதலியைக் கண்டதும்.... ஏன்.... இண்டைக்கு.... லேற்.... அல்லது என்ன.... இண்டைக்கு வேளைக்கு வந்திட்டீங்களோ.... எனத் தொடங்கி



**மௌனத்தில் கால் மணி நேரம்**
**சிரிப்பில் கால் மணி நேரம்....**
**பயத்தில் கால் மணிநேரம்**
கழித்துவிட்டு ஒன்றும் கதைக்காமலே.... போய்விடுகின்றனர்.

ஜோர்ச் புஷ் உம்.... பின்லாடனும் சந்தித்தால்.... எப்படி.... கதைக்க.... ஆரம்பிப்பார்கள்.... கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட முடியாது.... இளையதம்பிக்கு பக்கத்தில் மீனாக்கா.... றிச்மண்டஹில் பிள்ளையார் என்னைக் கைவிடேல்லை.... கதைக்க பேச ஆட்களில்லையெண்டு நினைச்சன் நல்லகாலம்.... இந்தா.... இளையாம்பி.... இதை ஒருக்கா.... மேலை.... வை.... என்று.... ஒரு பையைக் கொடுத்தா.... மீனாக்கா.
அவ்வளவும் கனடாவில் வெளியாகும் இலவசப் பத்திரிகைகள். அங்கே எல்லாப் பேப்பரும் காசு அது.... தான் எண்டு இழுத்தா.... மீனாக்கா.



பிள்ளையாற்றை.... புதுத்தேர்.... பாக்கேலாமைப் போச்சு.... ம்....
ஓம்.... மீனாக்கா.... நானும் புளூ ஜேஸ் பாக்கேலாமைப் போச்சு.... என ஒரு நீல் விட்டார்....
இளையாம்பி... சாதாரண விளையாட்டைப் பற்றியே தெரியாது இளையாம்பிக்கு....

சிவாயநம.... என்று சிந்திப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை.... இளையதம்பிக்கு வடிவாகத் தெரியும் ஆனால் அபாயமே.... பக்கத்தில் இருக்கிறதே.... சிவாய....நம.... பலனளிக்குமோ....
ஏதோ.... கதையை.... திசை திருப்பி.... மீனாக்காவை.... நித்திரையாக்கிவிட்டாளல் இலண்டன் ரான் சிற்றில் எப்படியாவது டிமிக்கி கொடுத்து.... தப்ப வேண்டும்....
அது.... சரி இளையாம்பி.... குமுதா எப்படியிருக்கிறாள்....
நான் வெளிக்கிட முதல்....நீயும்.... குமுதாவும் ராணித் தியேட்டரிலை.... "குலவிளக்கு' படம் பாக்கேக்கை சந்திச்சது.... பிறகு ஒரு நாள் சுபாஸ்கபேக்கை ஐஸ்கிறீம் குடிக்கேக்கை சந்திச்சது......பிறகு கொழும்பிலை ஒரு நாள் கோல்பேசில் இரண்டுபேரும் கரம்சுண்டல் வாங்கேக்குள்ளை சந்திச்சது.... பேந்து ஒருக்கா.... என்று சொன்ன படி இளையதம்பியை திரும்பிப் பார்க்க பெரு மூச்சும் குறட்டையும் சேர்ந்து வந்தது. காண்டாமிருகக் குட்டி பால் குடித்துவிட்ட மூச்சுப் போல இருந்தது இளையதம்பிக்கு.... உண்மையில் நித்திரையா.... அல்லது.... மீனாக்காவின் கதையைக் கேட்கவிருப்பமில்லாமல்.... தூக்குவது போல... நடிக்கிறாரா....

சரி.... இளையாம்பிக்கு.... நீ.... நித்திரை கொள் இலண்டன்.... வந்தா.... என்னை எழுப்பிவிடு என்றபடி... விமான சீற்றை... கீழே.... பதிக்கா.... மீனாக்கா....
நோ....நோ....நோ....நொட் நைஸ் என்றபடி மீனாக்காவின் சீற்றை.... நிமித்தினா விமானப் பணிப்பெண்....
தொடர்ந்து பல தமிழ்க் குடும்பங்கள் வந்தன.... எட....
இஞ்சை....எங்கடை....பிறிம்லி....மீனாக்கா....என்றபடி வந்தா புறோக்கர் புவனாக்கா....
பிறிம்பிலி...மீனாக்காவுக்கு.... பைலட் இல்லாமலே பிளேன் ஆகாயத்தில் பறந்தது.... போல இருந்தது என்ன.... மீனாக்கா.... சுவிஸ் போறியளாக்கும் உங்கடை...சுந்தரண்ணை.... இப்பவும் சுவிசிலை தானே.... என்றதும் மெல்லமாக்கதையடி.... நான் அவர் சிலோனிலை எண்டு தான் ஸ்பொன்சர் பண்ணியிருக்கிறன் எண்டு சவுண்டைக் குறைச்சுச் சொல்ல
குறட்டையும்.... பெருமூச்சு விட்டபடி கடைக்கண்ணால் மீனாக்காவைப் பார்த்து இரு காதாலும் செய்தியை உள்வாங்கிய படி.... அமைதியாக இருந்தார் இளையதம்பி....
தொடர்ந்து குறட்டையும் பெருமூச்சும்..... வந்து கொண்டிருந்தது ஆனால் மீனாக்காவின் மனது, கட்டுக் காசிழந்த எம்...பியின் மனம் போல்....துடித்துக் கொண்டிருந்தது.


## தமிழில் இலவச சேவைகள்!!!

றொறன்ரோவில் உள்ள பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம் பின்வரும் சேவைகளை தமிழில் வழங்குகின்றது.

* குடிவரவாளர்களுக்கு வேண்டிய உதவி:
  நிரந்தர குடியுரிமைப் பத்திரம் பெறும் வழிமுறைகள்.
  குடும்பத்தினரைப் பொறுப்பேற்றல்.
* இலவச ஆங்கில வகுப்புகள் - (கணினியுடன்) நிலைகள்: 1 - 2 -3 - 4 - 5
* சமூகநல, குடும்பநல உதவி பெறுவோர்க்கான உதவியை செய்தல்.
* தொழில், மற்றும் உயர்கல்வி சம்பந்தமான ஆலோசனை வழங்குதல்.
* சுகாதாரம், சட்டம், வீட்டு வசதி போன்ற துறைகளில் ஆலோசனை வழங்குதல்.
* மொழி பெயர்த்தல் மற்றும் விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல்.
* மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அங்கத்தினருக்கு வேண்டிய உதவிகள்.

மேலதிக விபரங்களுக்கு: சியாமளாவுடன் **416-261-4901 / 416-261-1380**

என்ற இலக்கங்களில் பின்வரும் சேவை நேரங்களில் தொடர்புகொள்ளவும்:
செவ்வாய் முதல் வெள்ளி வரை: காலை 9:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை



**எங்கள் அலுவலக முகவரி:**
பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம்
(Polycultural Immigrant & Community Service)
3178 எக்லிண்டன் அவென்யு கிழக்கு #206 (முதல் மாடியில்)
(மார்க்கம் & எக்லிண்டன் சந்திப்பு)

## YOGA CLASSES

For Natural Cure Health & Peace of Mind

**Raji (Ellango)** "Yoga Bhooshna"
(Certified Yoga Instructor)

**(416) 743-8173**

Fax: (416) 743-8392
78 Riverdale Dr., Etobicoke Ont. M9V 2T7



## Neelam SILK

**உயர்தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**
**முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்**

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

JAPAN CRYSTAL SILK
SONALIKA PURE SILK
JARDHOSHI SATIN & CREPE SILK
JAIPUR CRYSTAL SILK
VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

நீலம்



சில்க்

புதிய கிளை

416-759-2002
2378 EGLINTON AVE.,E
(Kennedy Rd. & Eglinton Ave., Scar.)

416-778-7455
Fax: 416-778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

# இன்சூரன்ஸ் (Insurance)



## வாகன காப்புறுதி - பகுதி 7

"காப்புறுதி" என்னும் இத்தொடர் அத்தியாயத்தில் கடந்த கட்டுரைகளில் "வாகன காப்புறுதி" என்ற சொற்றொடரினுள் அடங்கும் விடயங்களை ஆய்வு செய்தோம்.

இத்அத்தியாயத்தில் இருந்து "லைவ் இன்சூரன்ஸ்" எனப்படும். "ஆயுள் காப்புறுதி" என்னும் அம்சத்திற்கு வரு வோம்.

**ஆயு[illegible]ாப்புறுதி (LIFE INSURANCE)**

"ஆயுள காப்புறுதி" எனக் குறிப்பிடப்படும் போது, ஒருவருக்கு மரணம் என ஒன்று நடந்தால், அவரை நம்பியிருக்கும் குடும்பத்தினருக்கு நிவாரணமே இது வாகும்.

ஒருவர் "ஆயுள் காப்புறுதி" என்பதே இரண்டு நோக்கங்களுக்காக நம் வாழ்வில் தேவைப்படுகின்றது.

1. எதிர்பாராமல் ஒரு குடும்பத்தில் கணவனோ அல்லது மனைவியோ இறந் தால் நிச்சயமாக உயிரோடு இருக்கும் "கணவன்" அல்லது "மனைவியின்" இயங்கும் சக்தி அரை மடங்காக வீழ்த்தப் படும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் இவர்களை நம்பியிருக்கும் வாரிசுகள், பிள்ளைகளின் எதிர்காலம், வாழ்வு ஆகி யன பாதி தொலைந்த தாகவே போய் விடும். நிச்சயமாக இந் நிலையில் ஆயுள் காப்புறுதி வைத்திருந்து, அதில் இருந்து பெருந்தொகையாக பணம் கிடைக்கும் போது, அப்பெருந் தொகையான பணத் தினை ஒரு முதலீட்டில் இடுவதன் மூலம் அம்முதலீட்டு வருமானத்தில் இருந்து வாழ் நாள் முழுவதும் ஏனையோர் வாழ்ந்து கொள்ள முடியும். ("மரணங்கள்" நடந்த போது ஆயுள் காப்புறுதி வைத்[illegible]ந்தோர், வைத்திருக்காது விட்டோரின் அனு[illegible]பங்கள் இதற்கு ஓர் உதாரணங் களாகும்.)

2. இரண்டாவது நோக்கம் எங்கள் பிள்ளைகள், வாரிசுகளுக்கு ஒரு "திரண்ட பண முதலீடு" ஒன்றினை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கத்தில் ஆயுள் காப்புறுதி செய்து கொள்வதாகும்.

அதாவது நாம் நீண்டகாலம் உயிர் வாழ்வோம். எதிர்பாராத இளம் வயது மரணம் எங்கள் வாழ்வில் நடை பெறமாட்டாது என்ற எதிர்பார்ப்பில் வாழ் பவர்கள், என்றோ ஒரு நாள் நிச்சயமாக அமையப் போகும் மரணத்தின் ஊடாக வாரிசுகளுக்கு ஒரு முதலீடு கிடைக்கும் வழி வகையே இதுவாகும்.

உதாரணமாக இரண்டு பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பங்கள், தமது இரு பிள்ளை களையும் ஒழுங்காக படிப்பது, வளர்த்து விடுவதுடன் தமது இறுதிக் காலத்தில் ஏதாவது ஒரு தொகை சீதனமாக அல்லது முதலீடாக வழங்க விரும்பினால் இரண்டு மில்லியன் தொகைக்கு "ஆயுள் காப்புறுதி" ஒப்பந்தம் செய்துவிட்டால் போதும். அவரது நீண்ட கால வாழ்வின் பின்பு ஏற்படும் மர ணத்தின் பின்பு தமது சந்தததியினருக்கு வறுமைக் கோட்டினுள் வாழு[illegible] நிலைமை உருவாகமல் வழிகாட்டும் நிலை[illegible]பினை உருவாக்கி விடலாம்.

இக் கனடாவின் ஆங்கில இன சமூகத்தில் பலர் செல்வந்தராக இருந்து மிக பெரிய வீடு, சொத்து முதலீடுகள் என்பன எதுவித அடமானங்கள் கடன்கள் எதுவும் இல்லாமல் ஏதோ வாழ்வில் ஒரு தொழில் என்ற ரீதியில் ஒரு தொழிலைப் பார்த்துக் கொண்டு மிகுதி நேரங்கள் "கொல்வ்" (Golf) போன்ற விளையாட்டிலும் ஈடுபட்டு வாழ்வினை உல்லாசமாக அனுபவித்து வருகின்றார்கள் என்றால் அதற்குரிய காரணம் அவர்களின் முன் சந்ததியினர் மேற்கொண்ட ஆயுள்காப்புறுதி முதலீடும் ஒரு காரணமாக இருந்திருக்கும்.

இவ் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் "மரணம்" என்பது எப்படி, எந்த வகையில் நடந்தாலும் நட்டஈடு கிடைக்கும். ஆனால் "தற்கொலை மரணம்" என்றால் ஒப்பந் தத்தில் சேர்ந்து இரு வருடங்களின் பின்பு நடந்தால் மட்டுமே நட்டஈடு கிடைக்கும். முதல் இரு வருடத்தினுள் தற்கொலை மரணம் நடந்தால் செலுத்திய மாதாந்த கட்டுப் பணம் மட்டும் திருப்பிக் கொடுக்கப் படும்.

ஆயுள்காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரும் ஒருவர் "மோசடி" என்று குறிப்பிடப்படும் ஒரு நிலையில் தம்மைப் பற்றிய தகவல்கள் வழங்கும் போது எதுவித மோசடிகள், ஒழிப்பு மறைப்புகள் எதுவும் இல்லாமல் வழங்க வேண்டும். குறிப்பாக ஏதாவது குறிப்பிட்ட ஒரு நோயால் ஒருவர் பாதிக்கப்பட்டால் அது பற்றி ஒப்பந்தத்தில் சேரும் போது குறிப்பிடாமல் விட்டு, அது காரணமாக ஏதாவது மரணம் நடந்தால் "மோசடி" என்ற எண்ணக் கருவில் காப்புறுதி நிவாரணம் கிடைக்காமல் போன சம்பவங்கள் கனடாவின் வரலாற்றில் எங்கள் தமிழ் சமூகம் உட்பட பல நடைபெற்று உள்ளது. அதாவது சுருக்கமாக குறிப்பிடப் போனால் உண்மைகள் என்பது இங்கு மறைக்கப்படக் கூடாது.
ஆயுள் காப்புறுதி ஒப்பந்திம் செய்து கொள்ள விரும்பும் ஒருவருக்கு பல்வேறு வகையான விதம் விதமான ஆயுள் காப்புறுதி வகைகள் கனடாவில் உள்ள பல்வேறு வகையான கம்பனிகளினால் வழங்கப்பட்டு வருகின்றது. சகல கம்பனி களிலும் தெரிந்து எடுத்து அத்துறையில் படித்து விரிவான பயிற்சி பெற்ற "காப்புறுதி முகவர்கள்" இது பற்றிய ஒப்பந்தகளை தெளிவுபண்ணி வழங்கு வதற்கு

**சிவ பஞ்சலிங்கம், B.Com.**
**(Linced Insurance Broker by the Ontario Insurance Commission)**
**416-321-0999**

தயாராக உள்ளார்கள் பணி புரிபவராக இருப்பதால் தங்களின் "தெரிவுகள்" பல்வேறு வகைப் பட்டதாக இருக்கும்.

ஒரு குறிப்பிட்ட கம்பனிக்கு பணிபுரியும் முகவரினை அ பல்வேறு கம்பனிகளுக்கும் முகவராக பணிபுரிபவரின் மூலம் பரந்து பட்ட தகவல்களை பணிபுரிபவரின் மூலம், பரந்துபட்ட தகவல்களை பெற்று விரிவாக விளக்கி புரிந்து கொண்டு ஒப்பந்தத்தில் சேர்வது எப்போதும் மிகச் சிறந்தது.

கனடா நாட்டின் காப்புறுதிச் சட்ட ஒழுங்கு விதிகள், சகல கம்பனிகளையும் ஒழுங்கு படுத்தி நெறிப்படுத்துவதுடன் காப்புறுதி கம்பினிகளின் செல்பாடுகளை மத்திய மாகாண அரசின் நிதி அமைச்சுகள் கண் காணித்துக் கொண்டு உள்ளன. ஒரு காப்புறுதி கம்பனி நட்டமடைந்து, முறி வடைந்து போகும் நிலைமை வருமாக இருந்தால் அதனை கண்காணித்து வரும் கனடிய அரசு வாடிக்கையாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக அதனை ஏனைய கம்பனிகளுக்கு மாற்றிவிடுவது வழமையாகும். இது தவிர காப்புறுதி ஒப்பந்தம் செய்த ஒருவர் ஏதாவது ஒரு வழியில் ஒப்பந்தம் செய்த ஒருவர் ஏதாவது ஒரு வழியில் பாதிக்கப்படுபவராக இருந்தால் ஒரு குறிப்பிட்ட தொகை வளர அரசின் உத்தரவாதம் உண்டு. மக்களுக்கு நேரடியாக காப்புறுதி ஒப்பந்தத்தினை விற்பனை செய்யும. அரச அனுமதி பெற்றக் காப்புறுதி முகவர்களையும், அவர்களின் செயல்பாடுகளையும் "காப்புறுதி சபை" (Insurence & Commission) என்னும் நிறுவனம் முழு நேரமாக கண்காணித்து வருகின்றது.

காப்புறுதி ஒப்பந்தம் செய்த ஒருவர் பாதிக்கப்படும் நிலைமை உருவாகினால் அத்துறையில் நிபுணத்துவம் பெற்ற சட்டத்தரணி மூலம் சட்டரீதியாக அணுகி நியாயத்தினை பெற்றுக் கொள்ளலாம். சுருக்கமாக குறிப்பிடப் போனால் கனடாவில் "காப்புறுதி ஒப்பந்தம்" என்பது மிகுந்த நம்பத்தகுந்த விடயமே என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.


**NOW - EFFECTIVE RELIEF FROM CREDIT CARD DEBTS!**

Are you facing problems paying even the monthly minimum of your credit card dues? Or a bank or car loan? Are money problems causing tensions in family relationships?

There are solutions other than bankruptcy: easy repayment programs that you can manage.

Reduce your debts - pay no further interest. Your income, house, car, business and other assets will remain yours. And no collection calls!

**Get back your peace of mind with qualified credit counselling.**

**Find out more in a no - fee, face-to-face meeting.**
**Counselling in English, Hindi, Bengali.**
**No obligation. complette confidentialit assured.**



**Call Deepak in Scarborough (Eglington / Kennedy)**
**416-335-3345 or on Cell: 416-436-8828**
**Feel free to Call on Weekends.**
***Walk-in clients welcome - no appointments necessary***
***Tuseday through Sunday***

**இசையரங்கம் வழங்கும்**

இசைக்கு ஏது எல்லை - 4

மெல்லிசை இரசிகர்களின் கரம் பற்றி மெல்ல அழைத்து வந்து சாஸ்திரிய நதியில் நீராட்டும் இசைக்கு ஏது எல்லை - 4
காலம்: யூன் 09, 2002.
இடம்: சென்ரானியல் கல்லூரி கலையரங்கு75 அஸ்ரோன்பீ (warden & Eglinton)
தொடர்புகளிற்கு: 416.285.7269 416.750.8118

**SAFETY TRUCKS**
**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்
**We Accept Welfare & Unemployment Insurance**




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*
* *365 (Learning Permit)*
* *Lock Books*
* *Air Brake (Z)*
* *Dangerous Goods*
* *Border Crossing*
* *Defensive Driving Course*

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
**YOGAN SOCKALINGAM**
**Truck Driving** போதனாசிரியர்
(15 Years Canadian Experience with Trucks)
**(905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, Ont.**



# மாணவர் பகுதி

**S.F. Xavier (ஆசிரியர்)**

Answers to Tutorial 101: May 15, 02

Ans. 1. There have 101 integer in total of which 19 integers have atleast one digit which is 7. There 19 are 7,17,27,....67,70,71,72,....79,87,97. The probability is 19/101.

Ans. 2. There are 9 values for c.

Ans. 3. $F(x) = f^1(gx).\ g^1(x) \qquad F(2) = f^1(4).g^1(2) \qquad = 5.3 \quad = 15$

Ans.4. At 2pm No of players $= 50 \times {}^{30}/_{100} = 15$

No of players at 3 pm $= 35 \times {}^{40}/_{100} + 15 \times {}^{20}/_{100}$

$= 14 + 3 = 17$


Ans.5. $A + B = (x + y)^n \qquad A - B = (x - y)^n$

$\therefore A^2 - B^2 = (A - b)\ (A + B)$

$= (x + y)\ (x - y)^n \qquad = (x2 - y2)^n$

## Tutorial - 102


1. In the expression a/b + c/d +e/f each letter is replaced by a different digit from 1,2,3,4,5 and 6. What is the largest value of this expression.
